# விடுதலைப்புலிகள்

குரல்: 27 | தை 1992 | அன்பளிப்பு: 7/50

★ தொண்டமானுக்குப் புலிகள் கடிதம்: "தைப்பொங்கலுக்குப்பின் நீங்கள் வரலாம். உகந்த ஒழுங்குகளை நாங்கள் செய்வோம்."

★ "தொண்டமானின் யோசனைகள் நாட்டிற்கு ஒவ்வாதவை. அது நிச்சயம் நாட்டைப் பிளவுபடுத்தும். அதனை முழுமையாக எதிர்க்கிறோம்."

- பௌத்த மதகுரு வண ரம்புக்வல விபஸி தேரர் -

★ "2,3 மாதங்களில் வடபகுதியை சிங்களப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவர்."

- சிறிலங்கா முப்படைத் தளபதி ஹமில்டன் -

★ "எந்த ஒரு தனிநபரின் யோசனையாலும், இனப்பிரச்சினைக்கு ஒருதலைப்பட்ச தீர்வைக்காண முடியாது."

- கண்டி தலதா மாளிகையில் பிரேமதாசா -

# போரா? சமாதானமா?

## நாங்கள் சமாதானக்கதவுகளைத் திறந்தே வைத்திருக்கிறோம்

## சிங்கள அரசு போர் அரக்கனை ஏவிவிட முயல்கின்றது

**தமிழீழ மக்கள் மத்தியில் குறிப்பாக வடதமிழீழ மக்கள் மத்தியில் இன்று எழுந்து நிற்கும் விடைகாணமுடியாத கேள்வி என்னவென்றால் எம்மை எதிர்கொண்டபடி இருப்பது போரா? சமாதானமா? என்பதுதான்.**

**சிறிலங்கா பக்கமிருந்து சமாதானச் சமிக்கைகளும், போர் மிரட்டல்களும் கலந்துமாறி விடுக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில்தான் மேற்குறித்தபடி மக்களின் மனதில் கேள்விகள் எழுகின்றன.**

எமது மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடைகளை அகற்றி, இராணுவ முற்றுகையைத் தளர்த்தி சுமுகசூழ்நிலை ஒன்றை உருவாக்கி, சமாதானபபாதையைத் திறக்கும்படி நாங்கள் பலதடவைகள் சிறிலங்கா அரசைக் கேட்டுவருகின்றோம்.

### சமாதான முயற்சிகள்

சமாதான வழி மூலம் எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, நாம் என்றுமே தயாராகவே இருந்து வருகின்றோம். எமது நல்லெண்ணத்தை சர்வதேச உலகிற்கும், சிங்கள அரசிற்கும் தெரியப்படுத்தியே வந்திருக்கின்றோம்.

கடந்த ஜனவரிமாதம் நாங்கள் ஒருபக்க சார்பான போர் நிறுத்தமொன்றை பிரகடனப்படுத்தி அதைச்சரியாக நடைமுறைபபடுத்தியபடி சமாதானப் பேச்சிற்கு வருமாறு சிங்கள அரசைத் தூண்டினோம். ஆனால் சிறிலங்கா அரசு அதை போர்வெறியுடன் நிராகரித்துவிட்டது.

அதன் பின்னரும், மேற்கு நாடுகள் சில எடுத்த சமாதான முயற்சிகளுக்கு நாங்கள் போதியளவு ஒத்துழைத்தோம். ஆனால் சமாதானம் வரவில்லை.

கடந்த மாவீரர் நாளன்று தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தியிலும் "சமாதானத்தின் கதவுகளை நாங்கள் திறந்தே வைத்திருக்கின்றோம்" எனதெரிவித்திருந்தார்.

சமீபத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. தொண்டமான் அவர்கள் ஒரு சமாதான முயற்சியை தொடங்கி-தாமாகவே முன்வந்து - எம்மை அணுகினார். அதையும் நாங்கள் நிராகரிக்கவில்லை. அதன் பயனாக அவர் ஒரு தீர்வுத்திட்டத்தை எமக்குச் சமர்ப்பித்துளளார். அத்தீர்வுத்திட்டம் எமது தலைமைப் பீடத்தின் பரிசீலனையில் இருக்கும் அதேவேளை எதிர் வரும் தைப்பொங்கலுடன் திரு. தொண்டமானை யாழ்ப்பணம் வரும்படியும் நாம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளோம்.

அவர் யாழ்ப்பாணம் வந்தால் அவருடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

### சிங்கள அரசு போரை விரும்புகின்றது

இப்படியாக நாம் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்து வைத்தபடி பேச்சுக்குத் தயாராக இருக்கும் அதே வேளை சிறிலங்கா அரசு என்ன செய்கின்றது?

சகலவிதமான சமாதான முயற்சிகளையும் அசட்டை செய்தபடி அது போருக்கான தயாரிப்புக்களிலேயே ஈடுபட்டபடியுள்ளது. இராணுவ பலத்தின் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகின்றது.

திரு. தொண்டமானின் சமாதானமுயற்சிக்கும் அரசதரப்பிலிருந்து எந்தவித சமிக்கைகளும் வரவில்லை. அதேசமயம் தொண்டாவின் தீர்வுத்திட்டத்திற்கு சிறீலங்காவில் பலத்த எதிர்ப்பும் கிளம்பியிருக்கின்றது. ஆனாலும் அரசு தனது எதிர்ப்பை பகிரங்கமாக இன்னும் காட்டவில்லை.

இதற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் இருக்கின்றது.

(1) தான் ஒரு சமாதான விரும்பி என்று உலகிற்கு காட்டி உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து உதவிபெற முயல்வது.

(2) தமிழ் மக்களை ஒரு மாயைக்குள், சோர்வுக்குள் - உறுதியின்மைக்குள் வைத்திருக்க விரும்புவது

(3 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# சிங்களமக்களுக்கு ஒரு அழைப்பு

**"நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டைக் கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசியவாழ்வில், அவர்களது சுதந்திர வாழ்வில் நாம் எவ்வித மும் தலையிட விரும்பவில்லை."**

கடந்த மாவீரர் நாளன்று (27-11-91) தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தியில் சிங்கள மக்களை குறித்து மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பேரினவாத அடக்குமுறையிலிருந்து விடுபடுமுகமாக ஆயுதப் போரை நடாத்திக்கொண்டிருக்கும் தமிழீழ தேசிய இனத்தின் தலைவன், சிங்கள தேசத்தை மதித்தும், சிங்கள மக்களைக் கௌரவித்தும் விடுத்த அரசியல் பிரகடனத்தை சிங்கள மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது- பெரும்பாலான சிங்கள மக்கள் கருதுவதைப் போல- சிங்கள தேசத்திற்கெதிராகப் பிரகடனப் படுத்தப்பட்ட ஒரு போரல்ல. சிங்கள மக்களை அழித்து அவர்களது நிலத்தை அபகரிக்கும் நோக்கம் கொண்டதுமல்ல.

மாறாக, இத்தீவின் மைந்தர்களில் ஒருபகுதியினராகிய நாம் வரலாற்றுவழி வந்த எமது தாயகத்தில் எமது சொந்த விருப்பு-வெறுப்புக்களுக்கமைய சுதந்திரமாக, மானத்துடன் வாழ விரும்புகின்றோம்.

ஆனால், சிங்கள முதலாளித்துவ ஆளும்வர்க்கம் அதற்கு எம்மை அனுமதிக்க மறுக்கின்றது. தனது அடக்குமுறை இயந்திரமாகிய ஆயுதப்படைகளை எமது மக்கள்மீது ஏவி விட்டு, எமது மக்களைக் கொன்றொழித்து, எமது மக்கள் மீது குண்டுகளைப் போட்டு - பொருளாதாரத் தடைகளை விதித்து, தமிழ்மக்களை இனப்படுகொலைக்குட்படுத்துகின்றது.

வெறுமனே தமிழர்களை அடக்கி-ஒடுக்கமட்டும்தான், சிங்களஅரசு தனது ஆயுதப்படைகளைப் பயன் படுத்துகின்றதென்றில்லை. சிங்கள மக்களையும் ஒடுக்க அவற்றைப் பயன்படுத்துகின்றது.

இத்தீவில் தமிழ்மக்களுக்கெதிரான இனவெறி தூண்டிவிடப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை 40,000ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்திற்குப் பலியாகியுள்ளனர்.

ஆனால், சிங்கள ஆளும் வர்க்கத்திற்கெதிராக சிங்கள மக்கள் நடாத்திய, கிளர்ச்சிகளின்போது மட்டும் 70,000 சிங்கள மக்கள் சிங்கள ஆயுதப்படையினாலேயே கொன்றொழிக்கப்பட்டுள்ளனர் என்பதை சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

1971 ம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது 10,000 சிங்கள இளைஞர்களும், 1988-1990 ம் ஆண்டுகாலப்பகுதியில் ஜே. வி. பியை நசுக்க என்றபோர்வையில் 60,000 சிங்கள மக்களும் கொல்லப்பட்டது உலகம் அறிந்த உண்மைகளாகும்.

தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் தொடர்பாகவும், தேசிய இன உணர்வுகள் - தேசிய இன அபிலாசைகள் தொடர்பாகவும், எவ்வளவோ வரலாற்று நிகழ்வுகள் எம் கண்முன்னே நடந்துவிட்டன.

இந்த வரலாற்று அனுபவங்களில் இருந்து புதிய அரசியல் சிந்தனைகளும் உதித்துள்ளன. அதன் பயனாக உலகில் பல இன மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தங்கள் தங்கள் தாயகங்களில் தன்னாட்சி உரிமையுடன் வாழத் தொடங்கி விட்டார்கள்.

இந்தவகையில், தமிழீழ மக்களது தேசிய இன அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு, எங்களது அரசியல் உரிமைகளை அங்கீகரித்து, எமது மக்களை நிம்மதியாக- சுதந்திரத்துடன் வாழ சிங்கள மக்கள் அனுமதிக்க வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.

## புலிகளின் குரல்

இந்தவரலாற்று நிகழ்வுகளிலிருந்து சிங்கள இனம் ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, சிங்கள மக்களினதும் - தமிழ்மக்களினதும் பொது எதிரியாகவே சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் அதன் ஆயுதப்படைகளும் செயற்பட்டு வருகின்றன.

ஆனால் இவ் உண்மையை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளவிடாது தடுப்பதில் சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கம் பகீரத முயற்சி செய்கிறது.

இந்த நோக்கத்துடனேயே தமிழர்களுக்கெதிரான பேரினவாத சித்தாந்தத்தை தொடர்ச்சியாக சிங்கள மக்கள் மீது திணித்து, அவர்களுக்கு இனத்துவேசத்தை ஊட்டி, ஒரு மாயைக்குள் வைத்திருக்கின்றது.

இன்று உலகம் மாறிவிட்டது. பேரினவாதக் கோட்பாடுகள் உலகெங்குமே நிராகரிக்கப்பட்டு புதிய அரசியல் சிந்தனைகள் தோன்றி, அவை வளர்ந்தும் வருகின்றன.

பேரினவாதக் கோட்பாடுகள் மானிட வளர்ச்சியை - சமூகவளர்ச்சியை தடுத்து மக்களுக்குள் அழிவையும் - இழப்பையும் ஏற்படுத்துவதைத் தவிர வேறெதையும் வழங்கமாட்டாது என்பது உலகில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

அதன்பின் இத்தீவின் மைந்தர்களான தமிழரும், சிங்களவரும் தத்தம் தாயகத்தில் தன்னாட்சி உரிமையோடு நல்லெண்ணத்துடன் வாழலாம்.

இதன் அடிப்படையிலேதான் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் சிங்கள தேசத்தை அங்கீகரித்து, சிங்கள மக்களையும் - அவர்களது பண்பாட்டையும் கௌரவித்து எமது மக்களின் சுதந்திரதாகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆகவே, தொடர்ந்தும் பேரினவாதத்திற்குள் சிக்கிக்கிடந்தபடி தமிழீழ மக்களுக்கெதிரான இந்தப் போரைத் தொடர்வதில் சிங்கள மக்களுக்கு எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை.

மாறாக, இந்தப் பேரினவாத சித்தாந்த மாயைக்குள்ளிருந்து சிங்கள மக்கள் விடுபட்டு, தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை அங்கீகரிக்க வேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம்தான் சிங்கள மக்களும் தங்களது உரிமைகளை வென்றெடுத்து, உண்மையான சுதந்திரத்தை அவர்களாலும் அனுபவிக்க முடியும்.

இதன் மூலமே இத்தீவின் மைந்தர்களான தமிழர்களும் - சிங்களவர்களும் எதிர்காலத்தில் சமத்துவமாக - பரஸ்பர நல்லெண்ணத்துடன்- நட்புறவுள்ள அயலவர்களாக, நிம்மதியுடன் வாழமுடியும்.

## ஒரு போராளியின் குருதிச்சுவடு ......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது நாங்கள் தோற்கடிக்கப் பட்டதையா காட்டுகின்றது?''

''நாங்கள் தோற்கடிக்கப்படவில்லை என்று கொண்டுதான் இருக்கின்றோம்'' என மிக உறுதியோடும், பெருமையோடும் அவன் நேர்காணல் தொடர்கின்றது.

27-11-91. 3000க்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் ''வட்டேறவும்'' என்ற பெயரில் சுற்றிவளைப்பில் இறங்கினர்.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு பதிலடியாக சிறப்புத் தளபதியின் வேண்டுகோளுக்கமைய விசாலகன் தாக்குதல் ஒன்றை திட்டமிட்டான்.

பன்குடாவெளி இராணுவ முகாமிலிருந்தும், முதிரையடிஏத்தம் இராணுவ முகாமிலிருந்தும் உணவுப் பொருட்களை எடுக்க செங்கலடி நோக்கி வரும் இராணுவத்தினர்மீது தாக்குதல் நடாத்த தீர்மானித்தான்.

தாக்குதல் வலயப்பகுதியில் உள்ள முக்கிய வீதியில் 25 மீற்றர் நீளமுள்ள கறுத்தப் பாலமும், அவ்வலயத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 15 மீற்றர் நீளமுள்ள இன்னுமொரு பாலமும் இருந்தது.

29-11-91 காலை 8.40 மணிக்கு தாக்குதல் தொடங்கியது. 7 சிறீலங்காப்படையினர் கொல்லப்பட்டனர். மற்றையோர் தப்பி ஓடினார்கள்.

தாக்குதல் வலயத்தில் நின்ற விசாலகனிடம் இருந்து கட்டளைகள் பிறந்து கொண்டிருந்தன.

தாக்குதலில் காயமடைந்து காட்டுக்குள் ஓடிமறைந்து கொண்ட சிறீலங்கா இராணுவ வீரன் சுட்ட ரவை ஒன்று விசாலகனின் தொண்டைக்கு மேல் தாக்குகின்றது.

படுகாயமடைந்த ஜோய் 30-11-91 அன்று காலை 5.30 மணிக்கு வீரச்சாவைச் சந்தித்துக் கொண்டான்.

இந்தியப் படை வெளியேறிய சிறிது காலத்தில் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் செல்ல இருந்த தேனிசை செல்லப்பா குழுவினருக்காக திரு. காசிஆனந்தன் அவர்கள் தான் முன்பு எழுதிய

மீன் மகள் பாடுகின்றாள்
வாவி மகள் ஆடுகின்றாள்
மட்டு நகர் அழகான மேடையம்மா -இங்கே
எட்டுத் திசையும் கலையின் வாடையம்மா

என்ற பாடலுக்கு புதிதாக கடைசியில் நாலு வரிகளை எழுதினார். அதன் கடைசி இரண்டு வரிகள்

போர்க்கலையில் வல்ல புலிக் கூட்டமும் உண்டு
பகையை பொடிப் பொடியாக்கும் போராட்டமும் உண்டு

- யோகி -

❋ முரோ - முன்னேறு
இறுகு - திரும்பு
மறுகா - பின்பு, பிறகு
[இவை இன்றும் மட்டக்களப்பு பகுதியில் வழக்கிலிருக்கும் பழந் தமிழ் சொற்களாகும்]

ஜோயுடன் வீரச்சாவை தழுவியவர்கள்

- ☼ மாதவன் (முருகமூர்த்தி) அமிர்தலிங்கம் வந்தாறுமூலை
- ☼ துசன் பஞ்சாயுதம் சித்தாண்டி
- ☼ கங்கேயன் (றோயல்) தேவம் வந்தாறுமூலை
- ☼ தான்தோன்றி (ராஜன்) அற்புதராஜா கல்லடி

★ மேஜர் கமல்
(அருணாசலம்தேவர்- சுந்தரராஜன்)
வீரச்சாவு:- 02-03-1989

★ லெ. குகேந்திரன்
(குருகுலசிங்கம - அரசரத்தினம்)
வீரச்சாவு:- 02-03-1989

★ மேஜர் அரி
(காந்தலிங்கம் - பிரேமசிறி)
வீரச்சாவு:- 03-03-1989

★ சேவியர்
(இல்லையம்பலம் - பற்குணராஜா)
வீரச்சாவு:- 03-03-1989

★ கப்டன் சதீஸ்
மூத்ததம்பி - தெய்வேந்திரன்)
வீரச்சாவு:- 24-10-1988

★ லெப் கேணல் ஜஸ்டின்
(பொன்னுச்சாமி - பாஸ்கரன்)
வீரச்சாவு:- 17-09-1991

# படை எடுப்பை முறியடிக்க உறுதிபூணுவோம்

## அன்பார்ந்த தமிழீழ மக்களே!

நாம் சமாதானக் கதவை அகலத் திறந்து வைத்தபடி இருக்கின்றோம். ஆனால், சிறீலங்கா அரசு போர்முரசைக் கொட்டிக்கொண்டேயிருக்கின்றது.

தற்போதைய நிலையில், சிறீலங்கா அரசிற்கு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சுலபமானதொரு இராணுவ வெற்றிபற்றிய கனவில் இருக்கின்றார்கள்.

### இன்றைய சூழல்

இன்றைய சூழலில் சிறீலங்கா அரசின் அரசியல் நிலைப்பாடு என்னவென்றால், தொடர்ச்சியான முறையில், படிப்படியாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமீது படையெடுப்பை நடாத்தி, கணிசமான நிலப்பகுதியைக் கைப்பற்றி, புலிகளையும் இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்து- பணியவைத்து அவர்களை பேச்சுவார்த்தை மேடைக்கு இழுத்து "தீர்வுகளைத் திணிப்பதுதான்" அவர்களின் நோக்கம்.

அதற்காகவே வடதமிழீழத்தின் மீது, குறிப்பாக யாழ் குடா நாட்டின் மீது ஒரு பாரிய படை எடுப்பொன்றை நடாத்தும் தயாரிப்புக்களில் ஈடுபடுகின்றனர்.

புலிகள் பலமான நிலையில் இருக்கும் வரை சமாதானப் பேச்சுக்களை நடாத்தினால் அரைகுறை தீர்வுகளை அவர்கள் மீது திணிக்க முடியாது என்பது சிறீலங்கா அரசிற்கு நன்கு தெரியும்.

எனவேதான் புலிகளின் பலத்தை உடைக்க எதிரி எண்ணங்கொண்டிருக்கின்றான்.

புலிகளின் பலம் என்பது தமிழீழ மக்களின் தேசிய பலம்தான். அந்தத் தேசியபலத்தை அடித்தளமாகக்கொண்டுதான் எமது மக்களின் விடுதலைப் போராட்டம் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே புலிகளின்பலம் சிதைக்கப்படுவதென்பது தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படுவதற்கு ஒப்பானதாகும். சிங்கள இனவெறி இராணுவத்தின் கரங்களில் எமது மக்கள் சிக்குறுவதற்கு ஒப்பானதாகும்.

ஆகவே, எதிரியின் படையெடுப்பு முயற்சியை நாம் முறியடித்தேயாக வேண்டும்.

### வருமுன் காப்போம்

இப்பொழுதிலிருந்தே எமது போராளிகள் சிங்கள அரசின் படையெடுப்பிற்கு முகங்கொடுக்கத் தயாராகி வருகின்றனர்.

குடா நாட்டின் மீது சிங்கள இராணுவம் படையெடுத்தால் இதுவரை நடந்த சமர்கள் எல்லாவற்றையும் விட அது மிகப்பெரும் சமராக நடக்கும்.

எனவே அதை வெற்றிகொள்ள நாமும்பெரியதொருதயாரிப்பு முயற்சியில் உடனடியாகவே இறங்கவேண்டும்.

பாரிய தயாரிப்பு முயற்சி எனும் போது, அதை நடைமுறைப்படுத்த பெரியளவில் மனிதசக்தி தேவைப்படும். இதைத் தனிய புலிகளால் வழங்கமுடியாது. மக்கள்தான் புலிகளாக மாறி அம் மனித சக்தியை ஈடுசெய்யவேண்டும்.

> "நாம் சமாதானக் கதவைத் திறந்து விட்டிருக்கின்றோம். ஆனால், சிறிலங்கா அரசு போர் முரசு கொட்டுகின்றது. எம்மை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்து-பேச்சுவார்த்தை மேடைக்கு இழுத்து "அரைகுறைத் தீர்வுகளைத்" திணித்து விடலாம் என்பதுதான் அவர்களின் நோக்கம்"

நடந்துமுடிந்த ஆனையிறவுச் சமரிலும், மணலாற்றுக் சமரிலும் மக்கள் வகித்தபங்கு எம்மை உற்சாகப்படுத்தி எமக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. அந்தச் சமர்களில் போர்க்கள வெளிவேலைகளை பெருமளவில் நிறைவேற்றியது மக்கள்தான் என்பதை பெருமையுடன் வரலாறு சொல்லும்.

அதேபோன்றதொரு மக்கள் பங்களிப்பை இனிவர இருக்கும் சமரும் எதிர்பார்த்துநிற்கின்றது.

இந்தச் சமரில் போர்க்களவேலைகளுடன் மக்களின் தற்பாதுகாப்பும் பின்னிப்பிணைந்துகிடக்கின்றது.

கண்மூடித்தனமாக குண்டுகளை வீசி அழிவை ஏற்படுத்தி, வதந்திகளைப் பரப்பி மக்களைக் குழப்பமடையச் செய்து சமரில் தான் வெற்றிபெற எதிரி முயல்வான்.

### முற்காப்பும் கடமைகளும்

இதற்கு நாங்கள் இடங்கொடுக்காது மக்களை அணிதிரட்டி முன்தயாரிப்பு வேலைகளில் ஈடுபடவேண்டும். இதற்காக ஊர்கள் தோறும் தொண்டர்படை உருவாகி வேலைகளை நிறைவேற்ற வேண்டும்.

★ எல்லாவீடுகளிலும், பொது இடங்களிலும் திறந்த அகழிகளை அமைத்து குண்டு வீச்சுகளுக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ள வேண்டும்.

★ உணவு நெருக்கடியை இயன்றவரை தவிர்ப்பதற்காக இன்றிலிருந்தே உலர் உணவுகளை தயாரித்து சேமிக்கவேண்டும்.

★ வதந்திகளைக் கட்டுப்படுத்தி அனாவசிய இடம்பெயர்வுகளை தடுத்து செயற்கையாக ஏற்படும் நெருக்கடிகளை நீக்கவேண்டும். அதற்காக ஊர்கள்தோறும் தொடர்பாளர்களை நியமித்து உடனுக்குடன் செய்திகளையும், அறிவுறுத்தல்களையும் பரிமாறி மக்களை உறுதியாக வைத்திருந்து அவர்களை வழி நடாத்த வேண்டும்.

★ இரத்ததானம் வழங்குவதற்கும், காயமடையும் போராளிகளையும்-மக்களையும் பராமரிப்பதற்கும் ஒரு பராமரிப்பாளர்படை உருவாக்கப் படவேண்டும்.

★ தேவையான பகுதிகளில் விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு எமது போராளி ஒருவரின் தலைமையில் கண்காணிப்புக்கள் நடைபெறவேண்டும்.

★ எல்லாவற்றிற்கும் மேலாக போர் முனையில் காயமடையும்-வீரமரணமடையும் புலிவீரர்களது இடத்தை உடனடியாகவே நிரப்பி சண்டையை வெற்றிகரமாக நடாத்த இளைஞர்களும், இளம்பெண்களும் எமதுபடையில் சேர்ந்து கொள்ளவேண்டும்.

எதிரி நினைக்கின்றான், எமது கோட்டைக்குள் புகுந்து அங்கேயே எமக்கு சமாதி கட்டிவிட முடியுமென்று, ஆனால் வாசலில் வைத்தே எதிரியின் அழிவுகளைக்கொண்டே, அரணமைக்க நாங்கள் தயாராக இருப்போம்.

அதற்காக ஆண் - பெண் என்ற பேதமின்றி, வயதுவேறுபாடின்றி போர்க்கள வேலைகளில் பங்கெடுத்து எதிரியின் படை எடுப்பை முறியடிப்பதன் மூலம் போராட்டத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தி விடுவோம்.

# போரா? சமாதானமா?

( முதலாம் பக்கத் தொடர்ச்சி )

உண்மையில், நாம் சமாதானத்தை விரும்பும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிரி போரையே விரும்பி வந்திருக்கின்றான். இப்போதும்கூட ஒரு பெரிய படையெடுப்பொன்றுக்கு வேண்டிய இராணுவ ஆயுதங்களை எதிரி செய்து வருகின்றான் இந்த நிலையில் நாமும் போருக்குத் தயாராவதைத்தவிர வேறுவழியில்லை.

எமது வரலாற்று அனுபவத்திலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும், அதாவது சிங்கள இனவாத அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கமாட்டாது. அடிப்படை உரிமைகளைத் தானும் வழங்க விரும்பாது என்ற வரலாற்று உண்மையை உதாசீனம் செய்துவிட முடியாது.

எமது பலம்தான் போராட்ட வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாகும். பலம் என்னும்போது இராணுவ பலத்துடன் சேர்ந்த மக்கள் பலத்தையே குறிப்பிடுகின்றோம்.

### இன்றைய சூழ்நிலை

இன்றைய யதார்த்தம் இதுதான்.

யாழ் குடாநாட்டின் மீது ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட சிங்கள அரசு தயாராகி வருகின்றது. குடாநாட்டின்மத்திய பகுதியை இலக்காகக் கொண்டு பல முனைகளிலிருந்தும் ஒரேசமயத்தில் தாக்குதலை நடாத்த சிங்கள இராணுவம் திட்டமிடுகின்றது.


எதிரி எந்த நேரத்திலும் யாழ்ப்பாணம் மீது படை எடுக்கலாம். யாழ்ப்பாணத்துக்குள் சிங்கள இராணுவம் புகுந்தால் ஏற்படப்போகும் அழிவுகளும், அனர்த்தங்களும் எம் மனக்கண் முன் தெரிகின்றது. எனவே எதிரியின் படைஎடுப்பை நாங்கள் முறியடித்தேயாக வேண்டும்.

சிங்கள படை எடுப்பிற்கு முகங்கொடுக்க புலிகளாகிய நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் புலிகள் மட்டும் தயாராக இருந்தால் போதாது. இப்படை எடுப்பிற்கு முகங்கொடுக்க மக்களும் தயாராக வேண்டும்.

குடாநாட்டு மக்களைப் பொறுத்தளவில் இது வாழ்வா? சாவா? என்பதை நிர்ணயிக்கப்போகும் சமராகும்.

நாங்கள் வாழவேண்டும். எங்களது இனம் மானத்துடன் எழுந்து நிற்க வேண்டும். அதன் பொருட்டு போராடுவோம். சளைக்காது போராடத் தயாராகுவோம்.

# தமிழீழ காவல்துறையின் பிறப்பு தமிழீழத் தனியரசின் படிக்கல்




காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொள்கிறார். அருகில் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன்

வரலாற்றில் முதற்தடவையாக தமிழீழ காவல்துறை செயற்படத் தொடங்கியுள்ளது. தலைவர் பிரபாகரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இது செயற்பட்டுவரும். இதன் முதற்பொறுப்பாளராக திரு. நடேசன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ காவல்துறையின் பிறப்பானது எமது விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தைக் காட்டுகின்றது.

யாழ் நகரில் தனது முதலாவது பணிமனையைத் திறந்த தமிழீழ காவல்துறை படிப்படியாக குடாநாட்டின் மற்றைய பகுதிகளிலும் பணிமனைகளை நிறுவிவருகின்றது.

தமிழீழ மக்கள் மத்தியில் நீதியையும், ஒழுங்கையும் பேணும்வகையில் காவல்துறை தன்னை ஈடுபடுத்திக்கொள்வதுடன் விடுதலைப் போராட்டத்திற்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கும்.

19-11-1991

தமிழீழ மக்களிற்கு மட்டுமல்ல; 'தமிழ் பேசும் உலகத்திற்கே அது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒருநாள்.

தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்தின் சரித்திரத்தில் - அவர்களின் நலன்களைப் பேணுவதை மட்டுமே நோக்கமாக வரித்துக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட காவல்துறையான 'தமிழீழ காவல்துறை' யினது செயற்பாடுகள் அதிகார பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நாள்தான் அது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மிய ஒரு இடம் —

'தமிழீழ காவல் துறை'யின் ஆண் - பெண் படையினர் அணி வகுத்து நிற்கின்றனர்.

தமிழீழத்தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 'தமிழீழ காவல்துறை' யினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு - அவர்களின் செயற்பாடுகளை அதிகார பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஒரு தனியரசை நிறுவப்போகிடும் தமிழ் தேசிய இனமாகிய எமது 20 ஆண்டுகால ஆயுதப் போர் வரலாற்றில், பொறித்து வைக்க வேண்டிய சிறப்பு மிக்க ஒரு நிகழ்வு என்றே இதைச் சொல்ல வேண்டும்.

தமிழீழ மக்களாகிய நாம், கடந்த 500 ஆண்டுகளுக்கும் மேலான எமது சரித்திரத்தில் அந்நிய அரசுகளின் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டே வாழ்ந்திருக்கின்றோம்.

எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த வெளிநாட்டவர்கள், இங்கு 'சட்டம் ஒழுங்கு' என்ற பெயரில்- மக்கள்மீது தமது அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகித்தனர். இவை மீறப்படுகின்றபோது, ''சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கைகள் எடுக்கின்றோம்'' என்ற பெயரில், மக்கள் மீதான அடக்குமுறைச் சாதனமாகத் தமது காவல் துறையையே செயற்படுத்தினர். தங்கள் நாடுகளின் நலன்களைப் பேணுவதற்காக மட்டுமே வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களை நடைமுறைப் படுத்தவும், அவற்றின் அடிப்படையில் மக்களின் 'வாழ்வு முறையை'' மாற்றியமைத்து - எமது மக்களைக் கொண்டே எமது மண்ணின் வளங்களையும், உழைப்பையும் சுரண்டும் தமது உள்நோக்கை நிறைவேற்றவுமே தமது காவல்துறைகளைப் பயன்படுத்தினர்.

''சுதந்திரம்'' என்ற பெயரில் இலங்கைத்தீவு மொத்தத்தையும் சிங்களவரின் கையில் ''ஆட்சி'' ஒப்படைப்புச் செய்துவிட்டு, 1948 இல் பிரித்தானியர்கள் வெளியேறிய பின்பு - அப்போதிலிருந்து மாறிமாறி ஆட்சிபீடமேறிய சிங்கள அரசுகளும், தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்தின் மீதான தமது பிரதான ஒடுக்கு முறைக் கருவியாக, காவல்துறையையே பிரயோகித்தனர்.

தனது அடிப்படை மனித உரிமைகள்கூட மறுக்கப்பட்டு, தான் அடக்கி ஒடுக்கப்படுவதை உணர்ந்த தமிழ் தேசிய இனம்; தனது உரிமைகளைக் கோரி சாத்விகப் போராட்டங்களை முன்னெடுக்கத் துவங்கியது. அவ் அமைதிவழிப் போராட்டங்கள் வெளிப்படுத்திய ஆன்மீக உணர்வுகளை அசட்டை செய்த சிங்கள அடக்குமுறையாளர்கள், அப்போராட்டங்களை நசுக்குவதற்கு தமது ஆயுதம் தாங்கிய காவல் துறையையே பிரயோகித்தனர்.

காலப்போக்கில் சிங்கள அரசுகளின் ஒடுக்கு முறை தீவிரமடைந்து- தமிழர்கள் மீதான அவற்றின் 'அடக்குமுறைக் கொள்கை', 'இனப்படுகொலை' நடவடிக்கையாக ஒரு குரூரமான உயர் வடிவம் பெற்றது. ஆரம்ப காலத்தில், இவ் இன அழிப்புத் திட்டத்திற்கு சிங்களக் காவல் துறையினர்மூலமே செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

இதே சமயத்தில், நாம் கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயமும் உண்டு. தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆட்சியாளர்களின் ''நோக்கங்களை', நடைமுறைப்படுத்தவும், தமது உரிமைகளைக் கோரி தமிழர்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களை அடக்கவும், செயற்படுத்தப்பட்ட சிறிலங்காவின் காவல்துறையில் - இவ் உண்மை நிலையைப் புரிந்துணராமல் ஏராளமான தமிழர்களும் உறுப்பு வகித்தனர். பொறுப்பு மிக்க நிலைகளிலும் பணிபுரிந்தனர். அவர்கள் அரச விசுவாசமும், குறுகிய சிந்தனை ஓட்டமும் கொண்டவர்களாக வாழ்ந்தார்கள். அதாவது, சிங்கள அடக்குமுறையாளர்கள் தமிழர்களிற்கு எதிரான நடவடிக்கைகளிற்கு தமிழர்களையே பயன்படுத்தினர்.

இதே சந்தர்ப்பத்திலேயே, தமிழீழ மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டப் பாதையில் ஏற்பட்ட ஒரு பிரதான திருப்புமுனையாக, புரட்சிகர ஆயுதம் தாங்கிய போராட்ட வடிவம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது.

தமிழீழத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் தலைமையில், புலிகள் இயக்கம், அரசியல் - இராணுவ அமைப்பாக நின்று, புரட்சிகர ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தது.

தலைமறைவு-கரந்தடி- கெரில்லா குழுவாக முளைவிட்ட எமது இயக்கத்தை அரும்பிலேயே கிள்ளி எறிந்துவிடும் நோக்குடன், சிங்கள அரசுகள் - ஆரம்ப காலத்தில் தமதுகாவல் துறையையே, எமது தலைமறைவுத் தளங்களைத் தேடி அழித்து, எமது செயற்பாடுகளை முறியடித்து விடுதலைப் போராட்டத்தை ஆணிவேரோடு பிடுங்கி எறிந்துவிட முழுமையாகச் செயற்படுத்தின.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் மிருகத்தனமான படுகொலை நடவடிக்கை தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டது. இப் படுகொலையின் போது 9 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். இந்த ஈவிரக்கமற்ற கொலைகளை சிங்களக் காவல்துறையினரே புரிந்தனர்.

1979ல் ஆண்டு பிரிகேடியர் வீரதுங்கா என்ற சிங்கள இராணுவ அதிகாரி, சிறிலங்கா அரசால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். 3 மாத காலத்துக்குள் ''பயங்கரவாதத்தை'' ஒழிப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்த அவரின் தலைமையில், இராணுவத்தினருடன் சேர்ந்து, சிங்களக் காவல்துறையினர் இங்கு செயற்பட்டனர். அந்தக்காலப் பகுதியில் நிகழ்ந்த படுகொலை, உடமை அழிப்பு நடவடிக்கைகளை பெருமளவில் சிங்களக் காவல்துறையினரே செய்தனர். அவர்களினால் ஏராளமான தமிழ் இளைஞர்கள் ''காணாமல்போயினர்'' இவ்வாறு விடுதலைப் போராட்டத்தைக் கருவறுக்க சிங்களக் காவல் துறையினரே முழுமூச்சுடன் செயற்படுத்தப்பட்டனர்.

ஆனால் கால ஓட்டத்தில், தலைமறைவு - கரந்தடி - கெரிலலா - குழுவாக உதயமாகிய எமது அமைப்பு பலம் மிக்க ஒரு ஆயுத எதிர்ப்பு இயக்கமாகப் பரிணமித்து, சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்குப்பெரும் சவாலாக எழுந்தது. சிங்களக் காவல்துறை தனது செயற்படும் திறனை முற்றாக இழந்தது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# லெப். கேணல் ஜோய்

முடுகு... முடுகு...

ஆ... ஆ... கிறுகு... கிறுகு...

மெல்லிய உயரமாக இருந்த ஒருவனைப் பார்த்து கமல் கத்திக்கொண்டிருந்தான்.

'ஏண்டா, கமல் இப்படி கத்துது' நான் சதீசைக் கேட்கிறேன்.

சத்தம்கேட்டுத் திரும்பிய கமல் 'அண்ணை இவங்கள் தான் மறுகா கோஷ்டி'' என்று சொல்லி விட்டுச் சிரிக்கிறான்.

இது என்ன புதுக் கோஷ்டி. வியப்பாக இருந்தது. அதில் உயரமாக மெல்லியவனாக இருந்தவனைப் பார்க்கிறேன்.

'' அப்பன் இங்கே வா'' அவனை அழைத்தேன்.

'' எங்கிருந்து வந்தனீங்கள்'' நான் கேட்டுவிட்டு அவனைப் பார்க்கிறேன்.

'' நான் மட்டக்களப்பில இருந்து வந்தனான்'' என்கிறான் அவன்.

எனக்கும் ஜோய்க்கும் ஆரம்ப அறிமுகம் இப்படித்தான் நிகழ்ந்தது.


எங்களுக்கு மணலாறு காடு மட்டும் புதிதல்ல. மட்டக்களப்பு தமிழும் புதியதுதான்.

நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என 70 மைல்கள் அகண்டு கிடக்கும் மட்டக்களப்பு.

உழவு, விதைப்பு, வெட்டு எல்லாம் ஒன்றாக நடக்கும். தேனும், தயிரும் கொட்டிக் கிடக்கும் அழகான வளமான எம் நிலம்.

*1988......1989*

எம்மைச் சுற்றிவர இந்தியப் படை.



நாம் உழுது உழுது விதைத்து அறுவடைக்கு ஆயத்தமான போது, அறுவடையை அழிக்க வந்த அயலவனை மிரட்டிவிட்டு அபகரிக்க வந்த வேற்றவன்,

10 தமிழர்களுக்கு ஒரு இந்தியன், இந்திய முற்றுகைக்குள் புலிகளா? புலிகளின் முற்றுகைக்குள் இந்தியனா?

எம் மீதான முற்றுகை கண்முன் தெரிந்தது. அவன்மேலான எம் முற்றுகை தெரியாமல் நடந்தது. தடக்கித் தடக்கி அழிந்தான்.

நயினாமடு இந்தியப்படை முகாமுக்கு அருகே அவனது ஆட்டுப் பட்டி, ஒரு போராளி இரகசியமாக பட்டிக்கருகே சென்று ஆடுகளை '' பா பா '' என அழைக்கின்றான்.

ஒவ்வொரு ஆடாக, பட்டியில் இருந்த 29 ஆடுகளும் வெளியேறி வருகின்றன. ஆடுகளைச் சாய்த்தபடி அவன் நடக்கின்றான்.

இந்திய இராணுவத்தினன் ஒருவன் ஆடுகள் போவதைக் கண்டுவிட்டு ஏதோ கத்தித் தொலைக்கிறான்.

ஆட்டை வந்து பிடிக்க அவனுக்குத் துணிவில்லை. வெளியே வர வேண்டுமானால் குறைந்தது 50 சிப்பாய்கள் துணைவேண்டும்.

ஆட்டைத்தேடி உலங்கு வானூர்தி வந்து ஆடு சாய்ப்பவனைத் தேடித்தேடி சுடுகின்றது.

அடுத்தநாள் இந்திய இராணுவத்தின் வோக்கி எண்ணில் அவனது ஆடு கத்தும் சத்தம் கேட்டு அவன் கத்திக்கொண்டிருந்தான்.

தனது ஆட்டையே காப்பாற்ற முடியாத இந்தியப்பெரும் படை தமிழீழ நாட்டுக்கு ஆசைப்பட்டது.

இப்படி அவனது முற்றுகைக்குள் நாமும், எமது முற்றுகைக்குள் அவனும் ஒடிப்பிடித்து விளையாடும காலத்தில் தான் ஜோய் மணலாற்றிற்கு வந்தான்.

மணலாறு காடே குண்டு வீச்சால் அதிர்ந்து கொண்டிருந்தது.

'' பொங்கலுக்கு இந்தியன்வெடி கொளுத்துகிறான்'' பொங்கலுக்காக நிகழ்சசிகள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஜஸ்டின் என்னைப் பார்த்துக் கூறினான்.

'' இரவு என்ன நிகழ்ச்சி'' நான் கேட்கிறேன்.

'' பாட்டு, டான்ஸ் இப்படி பல' ஜஸ்டின் அபிநயம் பிடித்துக் காட்டினான்.

பொங்கல், கிறிஸ்மஸ், போராளிகளின் நினைவு நாட்கள் எனச் சில நிகழ்ச்சிகள் காட்டில் நடக்கும்.

இரவு, ஏதோ ஒரு புது மொழியில் பாடி தனக்கேற்றாற்போல் தன் பெரிய உடம்பை ஒய்யாரமாய் வளைத்து, நெளித்து ஜஸ்டின் ஆடினான்.

அடுத்து மேளங்களான தகரங்கள் முழங்க ''ஜோய் வழங்கும் பிறேக் நடனம்'' அறிவிப்பு வருகின்றது.

வளைந்து, நிமிர்ந்து, முறிந்து... என்ன உடம்படா, இப்படி வளைந்து முறிகின்றது.

'வடமோடி, தென்மோடி இவன் பிறந்த இடமோடி, இவன் கூத்து என்ன கூத்தோடி'' நான் என்னுள் முணுமுணுத்தபடி அவன் நடனத்தை ரசித்துச் சுவைக்கிறேன்''

ஆர்.பி.ஜி. தோளில் வைத்தபடி ஜோய் நிமிர்ந்து நின்றால், உடம்பில் வளைவிருக்காது.

தமிழீழ சிறீலங்காப் போர் மீண்டும், தொடங்கியபின், யாழ் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் ஜோய் காயமடைந்தான்.

ஒரு கால் சிறிது காலம் உணர்வு குன்றி இருந்தது.

மட்டக்களப்பு மண்ணுக்கே உரிய கலை இரசனையும், இலகுவாகப் பழகும பண்பும், சூதுவாதற்ற பேச்சுக்களும் ஜோயை விட்டுப் பிரிந்தது கிடையாது.

மட்டக்களப்பை மேலிருந்து பார்த்தால் கடற்கரையை அண்டிய பகுதிகள் பெரும்வெளியாக இருக்கும்.

கடலுக்குச் சற்று மேலே வந்து நிற்கும் நீர் மூழ்கிக் கப்பல் போல, சுற்றிவர இருக்கும் ஏரியும், இடையிடையே தெரியும் நிலங்களும், வீடுகளும் கரந்தடிப் போராட்டத்திற்கு கடினமான பகுதிதான்.



## ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்

மட்டக்களப்பு - அம்பாறை
பிராந்திய தளபதி

**லெப். கேணல் ஜோய் (விசாகன்)**
**(கணபதிப்பிள்ளை ரகுநாதன் -**
செங்கலடி.)

பிறப்பு: 20.05 1969
வீரச்சாவு: 30 11.1991

'' 70ல் வந்த புயலோடு மரங்கள் எல்லாம் அழிந்து போயிற்று. அடுத்து வந்த இனவாதப் புயலோடு எல்லாமே போயிற்று'' என்றார் ஒருவர்.

ஒவ்வொரு வீட்டிலும் சோகக் கதைகள் இருக்கும். சிங்கள, முஸ்லீம் காடையர்களினதும், சிறீலங்கா இராணுவத்தினதும் கொலைத் தடையங்கள் பதிந்திருக்கும்.

இந்தியப் படையுடனான போராட்ட காலத்தில் தமிழீழத்தின் மற்றைய பகுதிகள் போலவே, மட்டக்களப்பு, அம்பாறையிலும் அழிவுகள்தொடர்ந்தது.

மிகப்பெரிய நெருக்கடிகளைச் சந்தித்த போதும் '' எங்களுக்கு மிகப் பெரிய நெருக்கடி மிகுந்த துன்பத்திற்கு நடுவில் போராடுகின்றோம'' என ஒரு வார்த்தை மட்டக்களப்பு. அம்பாறை விசேட தளபதி கருணாவிடம் இருந்து வந்ததில்லை.

'' எங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. என்றே எப்போதும் பதில் வரும்.

தலைவர் வளர்த்த பிள்ளை அவன் தளராது நின்றான். அவன் பாசறைதான் ஜோய் தவழ்ந்த வீடு.

அன்று தலைவரின் பாசறையான மணலாறுதான் அவன் வளர்ந்த வீடு.

இந்திய கூர்காப் படைகள் குறித்து பல வீரக் கதைகள் உண்டு.

ஒரு முறை ஒரு ஆங்கிலச் சிப்பாய் ஒரு கூர்க்காவைக்குறிபார்த்து '' உன்னைச் சுடுவேன்'' என்றான்.

அதற்கு கூர்க்கா அச்சிப்பாயை பார்த்து '' முதலில் தலையை ஆட்டு பின் சுடு'' என்றானாம்.

சிப்பாய் தலையை ஆட்ட தலை விழுந்து விட்டதாம்.

ஆங்கிலேயன் 'சுடப்போகிறேன்' என்று சொல்லும்போதே கூர்க்கா தனது கத்தியை அவனது கழுத்தைக் குறிபார்த்து வீசி விட்டானாம்.

அவ்வளவு விரைவு, கத்தி கூரானது. அதனால் வெட்டப்பட்ட தலை விழவில்லை. தலையை ஆட்டியபோது தலை விழுந்து விட்டதாம்.

இப்படி வீரக்கதை பேசும் கூர்க்காப் படையொன்று 2-3-1989 அன்று கேணல் பக்சியின் தலைமையில் மணலாற்றுக்குள் நுழைந்தது.

கமல், அரி, குகேந்திரன், சேவியர் இவர்களுடன் ஜோயும் அங்கு நின்றான்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தச் சண்டையில் கூர்க்காப்படை பக்சியின் உடலையும் விட்டு விட்டு ஓடியது. ஓடும்போது தமது கத்திகளை மிக வேகமாக மண்ணில் புதைத்து, புதைத்து ஓடியது.

கூர்க்காப்படை தமது கத்திகளை புதைத்துவிட்டு ஒடிய மணலாற்றில் ஜோயின் போரியல் கல்வி தொடர்ந்தது.

இவன் போன்றோரின் போரியல் கல்வியே இந்தியப்படைக்குப் போராட்டப் படிப்பினையாகியது

தமிழீழ - சிறீலங்காப்போர் மீண்டும் தொடங்கியபோது சிறீலங்காப்படை, முஸ்லீம் காடையர், தேச விரோதக் கும்பல் இவற்றால் மட்டக்களப்பு, அம்பாறை தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

வீடுகள் எரிந்தன. பாலியல் வன்முறைகள் தொடர்ந்தன. மதவுகளுக்கு கீழ், காட்டு மரங்களுக்கு கீழ் தமிழ் மக்கள் வாழ்க்கை தொடர்ந்தது.

'' தென் தமிழீழத்தில் புலிகளா? அழிந்து விட்டார்கள். என சிறீலங்கா கொக்கரித்தது. வீட்டில் ரகுநாதன் எனவும் இயக்கத்தில் ஜோய் எனவும் இப்போது விசாலகன் ஆகிவிட்ட ஜோய்மட்டக்களப்பில் மீண்டும் காலடி எடுத்து வைத்தான்

மிகக்குறுகிய காலத்தில் அவன் ஆற்றல் கண்ட மட்டக்களப்பு, அம்பாறை விசேட தளபதி கருணா, அவனை மட்டக்களப்பு, அம்பாறை தளபதி ஆக்கினார்.

புலிகளா? எங்கே? எனக் கேட்டு கொக்கரித்த சிறீலங்காப்படை '' ஐயோ எல்லா இடங்களிலும் மீண்டும் புலிகள்'' என அலற அலற தாக்குதல்கள் தொடர்ந்தன.

தொடர்ந்த தாக்குதல்களில் ஒன்று 25 - 10 - 1991 கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமில் இருந்து மண்முனைத்துறைக்கு சென்ற இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்.

விசாலகன் (ஜோய்) தலைமையில் நடந்த இத்தாக்குதலில் எதிர்பார்த்தபடி தாக்குதல் வலயத்தில் சிறீலங்காப்படை வராததால் தாக்குதல் திட்ட மிட்டபடி நடக்கவில்லை.

15 நிமிட தாக்குதலில் பல சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர் 6 துப்பாக்கிகள் கைப்பற்றப் பட்டன.

'' விடுதலைப் புலிகள் இல்லை என்கிறீர்கள், அக்டோபர் மாதம் மட்டும் நாம் எதிரியிடம் இருந்து பறித்த ஆயுதங்கள் ஒன்றா இரண்டா'' என பெருமையோடு தளபதி ஓர் செய்தியாளரை கேட்டார்.

டிசம்பர் 20 வெளிவந்த புரண்ட்லைன் ( Frontline ) சஞ்சிகையில் விசாலகனின் நேர்காணல் வந்திருக்கின்றது.

'' எங்களுக்கு மக்கள் ஆதரவில்லை என்கிறார்கள் இவ்வளவு சிங்களப்படை முகாம்களுக்கு நடுவில், படலில், உங்களை எங்களிடம் யார் அழைத்துவந்தார்கள்? ஆதரவில்லாமல் இது நடக்குமா?''

'' முல்லைத்தீவில், அம்பாறையில் கைவிடப்பட்ட முகாம்களைத் தான் சிறீலங்காப்படை கைப்பற்றியது''

'' மணலாற்றில் மைக்கல் முகாமுக்கு வந்த சிறீலங்காப்படை பின்வாங்கிய பின் அங்கு சென்ற நாம் கண்ணிவெடியில் சிக்கிய 100 காலணிகளைக் கண்டோம். எவ்வளவு இழப்பை அவர்கள் சந்தித்திருக்கிறார்கள்''

'' மட்டக்களப்பு நகரத்துள்நாங்கள் இல்லை என்பது பொய். நாம் தேவைக்கேற்ப, சூழலுக்கு ஏற்ப எங்கும் செல்வோம''

'' நீங்கள் நேரில் நின்று நிலைமையை பார்க்கலாம்''

'' நாங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டோம் எனச் சொல்கிறார்கள், அக்டோபர் மாதம் மட்டும் 51 ஆயுதங்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியுள்ளோம்.

(2ம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் நன்னீர் வளம் உழைப்பாள மக்களின் சாதனை!

★ 31 குளங்கள்
★ 32 வாய்க்கால்கள்
★ 52 உவர்நீர்த்தடுப்பு அணைக்கட்டுகள்
★ 2 வடிகாலமைப்புகள்

தமிழீழம் பொதுவாக வளம் பொருந்திய ஒரு நாடு என்பதில் எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை. ஆனால் தமிழீழத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்கு அதாவது முன்னேற்றமடையச் செய்வதற்கு சிறீலங்கா அரச நிர்வாகம் எப்போதுமே உதவி வழங்காது என்பது வெளிப்படையானது ஏனெனில் தமிழீழத்தின் பொருளாதார வளத்தைச் சிதைத்து அதன் தனித்துவத்தை இழக்கச் செய்து அதன் போராட்ட குணாம்சத்தை அழிப்பதற்கு சிறீலங்கா அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றது.

யாழ் - குடாநாட்டைப் பொறுத்தவரை அதனைச் சூழ கடல் வளம் இருந்தாலும் அதன் அடிநாதமாக நிலத்தடிநீர் வளமே உள்ளது.

இந்த நீர் வளம் அற்றுப் போனால் இக்குடா நாட்டின் நிலப்பரப்புகளில் மனித இனமோ - விலங்குகளோ - தாவரங்களோ உயிர் வாழ முடியாத வறண்ட பாலை நிலங்களாக மாறி விடும் சாத்தியப்பாடு உள்ளது.

இன்று யாழ் குடா நாட்டு நிலப்பரப்பின் நீர் வளம் அருகி வருவதாக ஓர் கணிப்பீடு உள்ளது.

மழை நீர் நிலப்பரப்பில் அதிகளவு தேக்கி வைக்கப்படாததும் பெருகி வரும் குடிசன அடர்த்தியும், உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு நீர் வளம் அளவுக்கதிகமாகவும் முறை கேடாகவும் பயன்படுத்தப்படுவதுமே இதற்கான காரணங்களாகும்.

இத்தகைய காரணிகளால், குடாநாட்டின் நன்னீர் உவர் நீராக மாறுகிறது. அத்துடன் நன்னீர் மட்டமும் குறைகிறது. இதனால் குடாநாடு வரண்ட பிரதேசமாக மாறிவிடும் அபாயம் உள்ளதாக நீர்வள ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

குடா நாட்டின் நன்னீர் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக பல்வேறு காலகட்டத்திலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டே வந்துள்ளன.

மழை நீரை சேக்கி வைக்கும் குளங்களும், கடல்நீர் - நிலப்பரப்புகளில் ஊடுருவி வருவதை தடுப்பதற்குரிய கடல் நீர் அணைக்கட்டுகளும் தமிழ் மன்னர் ஆட்சிக்காலங்கள் தொடக்கம் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

தமிழீழத்தின் இந்த நிலை சிங்கள அரச நிருவாக காலத்தில் மாற்றம் பெற்றது. இக்குளங்களும் - அணைக்கட்டுகளும் கவனிக்கப்படாமல் விடப்பட்டது. இதனால் குடாநாட்டின் நன்னீர் வளம் பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டது. குடாநாடு எதிர்நோக்கும் இந்த அழிவை தடுப்பதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையையும் இதுவரை காலமும் இருந்த எந்தவொரு சிறீலங்கா அரசும் எடுக்கவில்லை. மாறாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தடுப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்தின. இதற்கு உதாரணமாக தொண்டமனாறு நன்னீர் திட்டத்தை குறிப்பிடலாம். அதாவது உப்புநீரான தொண்டமானாற்றை நன்னீராக மாற்றும் திட்டம் 40 வருடகாலமாக சிறீலங்கா அரசுகளால் தடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் அபிவிருத்திக்கு என்று சொல்லிக்கொண்டு வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் பெருமளவு நிதியை சிறீலங்கா அரசு, சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்கும் - சிங்களக் குடியேற்றப் பகுதிகளின் அபிவிருத்திக்குமே பெருமளவில் செலவிடுகிறது. அத்துடன் தனது பாதுகாப்புப் படையை பலப்படுத்துவதற்கும் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்கிறது.

## செய்து முடித்த குளங்களின் விபரங்கள்.

| இல. | பெயர். | உ. அ. அ பிரிவு. | வெட்டப்பட்ட மண் (கியூப்) | பயன் அடையும் காணியின் விஸ்தீரணம் (ஏக்கர்) | பயன் அடையும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பனைக்குளம். | தெல்லிப்பளை. | 206 | 40 | 72 |
| 2 | அளகொல்லைக்குளம்- 1 | ,, | 240 | 12 | 25 |
| | அளகொல்லைக்குளம்- 2 | ,, | 450 | 05 | 15 |
| 3 | பிணாக்கைக்குளம். | ,, | 852 | 250 | 320 |
| 4 | பெரியதம்பிரான்குளம். | ,, | 130 | 12 | 30 |
| 5 | கந்தரோடைக்குளம். | உடுவில் | 1385 | 275 | 1600 |
| 6 | பொன்னாலைக்குளம். | சங்கானை. | 827 | 500 | 300 |
| 7 | நளவராயன்குளம். | ,, | 296 | 60 | 145 |
| 8 | வெள்ளவராயன்குளம். | ,, | 415 | 70 | 175 |
| 9 | நெடுங்குளம். | ,, | 240 | 65 | 160 |
| 10 | பெரியகுளம் - அராலி. | ,, | 548 | 160 | 90 |
| 11 | ஆவரம்பிட்டிக்குளம். | ,, | 510 | 18 | 32 |
| 12 | ஓடைக்குளம் | ,, | 391 | 40 | 35 |
| 13 | மண்டிகைக்குளம். | ,, | 285 | 50 | 105 |
| 14 | யமைக்குளம் - சுதுமலை. | சண்டிலிப்பாய். | 155 | 30 | 65 |
| 15 | தில்வன்குளம். | ,, | 190 | 08 | 20 |
| 16 | வெட்டுக்குளம். | ,, | 66 | 04 | 10 |
| 17 | மணிப்புரிக்குளம். | நல்லூர். | 450 | 01 | 02 |
| 18 | செப்மணிக்குளம். | ,, | 508 | 150 | 180 |
| 19 | கரவெட்டியான்குளம். | கோப்பாய் | 780 | 100 | 100 |
| 20 | நுணாவில்குளம். | சாவகச்சேரி | 409 | 85 | 70 |
| 21 | விளைவேலிக்குளம். | ,, | 80 | 70 | 70 |
| 22 | கிராம்பிவில்குளம். | ,, | 80 | 70 | 85 |
| 23 | ஓவாரிக்குளம். | ,, | 110 | 45 | 40 |
| 24 | அல்லாரைக்குளம். | ,, | 450 | 35 | 35 |
| 25 | சிலாவிக்குளம். | ,, | 250 | 40 | 50 |
| 26 | உசன்குளம். | ,, | 1800 | 170 | 80 |
| 27 | கேலன்காமன்குளம். | உடுவில். | 805 | 120 | 300 |
| 28 | பரவைக்குளம். | சண்டிலிப்பாய். | 260 | 38 | 60 |
| 29 | சித்தில்குளம். | சங்கானை. | 125 | 35 | 70 |
| 30 | குடாக்கரைக்குளம். | சண்டிலிப்பாய். | 298 | 35 | 80 |
| 31 | தேவராணிக்குளம். | சாவகச்சேரி. | 181 | | 09 |
| | | | 13756 | 2594 | 4430 |

## மக்களோடு புலிகள்

இத்தகைய நிலையில், உதவி வழங்கும் வெளிநாடுகளை ஏமாற்றவும் ஒரு கண்துடைப்பிற்காகவும் சிங்கள அரச நிருவாகத்தினர் சிறு தொகை நிதியை தமிழ்ப் பகுதிகளின் தேவைக்கு என ஒதுக்குகின்றனர். இச் செயலின் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு என்று பெறப்பட்ட நிதி சகல பகுதிகளிற்கும் பங்கீடு செய்யப்படுகிறது என்ற தோற்றத்தை உதவி வழங்கும் நாடுகளிற்குக் காட்ட சிறீலங்கா அரசு முயற்சிக்கிறது. இதன்படி அண்மையில் சிங்கள அரச நிர்வாகம் 4 குளங்கள், 9 வாய்க்கால்கள், ஒரு வடிகாலமைப்பு, ஓர் உவர் நீர் அணைக்கட்டு ஆகியவற்றின் புனரமைப்பிற்கு என ஒரு சிறுதொகையான 21 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்தது.

இதனிடையே தமிழீழப் பகுதிகளுக்கு ஒரு சிறு தொகை நிதி ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்படுவதும் - அவை திரும்பிச் செல்வதும் வழமையான ஒன்று என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

சிங்கள அரசினால் காலம் தாமதித்து - குறைந்த கால அவகாசத்துடன் அனுப்பப்படும் இப்பணத்தை இங்கிருக்கும் சில அரச அதிகாரிகள் தங்கள் அலட்சியத்தாலோ அல்லது வேறும் காரணங்களிற்காகவோ வெளியில் தெரியாமல் மிகவும் புத்திபூர்வமாக திருப்பி அனுப்பி வைப்பார்கள். அந்தப்பணம் சிறீலங்கா அரச பாதுகாப்பு நிதியில் சேர்க்கப்படும். இந்நிலை தற்போது பெருமளவில் மாறி உள்ளது என்பது குறிப்பிடக்கூடியது.

இத்தகைய ஒரு நிலையில் - குள நிர்மாண வேலைகளுக்கான இத்திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் எமது பொறுப்பில் எடுத்துக்கொண்டோம்.

எம்மிடம் 4 குளங்களிற்கும், 9 வாய்க்கால்களுக்கும், ஒரு வடிகாலமைப்பிற்கும், ஒரு உவர்நீர் அணைக்கட்டிற்கும் என ஒதுக்கப்பட்ட 21 இலட்சம் ரூபாவே கையிருப்பில் இருந்தது. இப்பணத்தை வைத்துக்கொண்டு குடாநாட்டின் தேவையை நிவர்த்திக்கக் கூடிய மிக அதிகளவிலான வேலையைச்செய்து முடிக்க வேண்டும் என திட்டமிட்டோம். முடிவில் - 31 குளங்களும் 32 வாய்க்கால்களும், 5 உவர்நீர்தடுப்பு அணைக்கட்டுகளும், 2 வடிகாலமைப்புக்களும் திருத்தி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## செய்து முடித்த உவர் நீர்த்தடுப்பு அணைக்கட்டுகள்.

| பெயர் | நீளம் | வெட்டப்பட்ட மண் (கியூப்) | பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை | பயனடையும் காணியின் விஸ்தீரணம் |
|---|---|---|---|---|
| 1 அராலி உவர் நீர் தடுப்பு அணைக்கட்டு -1 | 04மைல் | 2565 | 327 | 350ஏக்கர் |
| ,, -2 | 04மைல் | 1200 | | |
| 2 சிலித்து வெள்ள வாய்க்கால் | 2190 அடி | 147 | | 200ஏக்கர் |
| 3 தனங்கிளப்பு உவர் நீர் தடுப்பு அணைக்கட்டு | 03மைல் | 800 | 200 | 400ஏக்கர் |
| 4 அரியாலை உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டு (உடைவு திருத்தம்) | 150' அடி | 185 | .............. | .............. |
| | | 4897 | 527 | 950 |

# தமிழீழ காவல்துறை

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத்தில் முதற்தடவையாக அந்நியக் காவல்துறை செயலிழக்கச் செய்யப்பட்டது.

வரலாறு விரிந்தது.

இப்போது —

தமிழீழ மக்களின் தேசியப்புரட்சி அமைப்பாகவும், தேசிய விடுதலைப் படையாகவும், எமது இயக்கம் பரிணாம வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது. தமிழீழ மக்களின் தேசப்பற்றுணர்வைத் தட்டி எழுப்பி, அவர்களைத் தேசிய ரீதியில் ஒன்று திரட்டி — தேசிய சுதந்திரப் போராட்ட சக்தியாக எமது இயக்கம் உருப்பெற்றிருக்கின்றது. இன்று எமது தனியரசுப் போராட்டம் உலகப் பிரசித்தி பெற்ற விடுதலைப் போராக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் சிவில் நிர்வாகம் முற்று முழுதாகச் சிதைக்கப்பட்டு, எமது தாயகத்தின் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்ட இன்றைய சூழ்நிலையில், அப் பிரதேசங்களில — சட்டம், ஒழுங்கு நிலைமையில் சீர்குலைவுகள் ஏற்படாத வண்ணம் பேணி, மக்களின் சமூக வாழ்வுக்குள் சீர்கேடுகள் தலைதூக்காதவாறு தடுத்து, சமூக விரோத குற்ற நடவடிக்கைகள் முளைவெடுக்காதவாறு நிர்வகிப்பதுடன் — எமது மக்களின் சமூக வாழ்வின் உன்னத நிலையைப் பேணி; மேம்படுத்த வேண்டியது எமது இயக்கத்தின் கடமையும்; பொறுப்புமாகும்.

அவ்வாறே, எமது இயக்கம் இது வரை காலமும் மக்களுக்குள் சட்டம் ஒழுங்கைப் பேணி, அவற்றில் சீர்குலைவுகள் ஏற்படாதவாறு கவனித்து அது தொடர்பான நடவடிக்கைகளையும் எடுத்துவந்தது.

ஆனால், எமது இயக்கம் - தனியரசை நிறுவும் எமது சுதந்திரப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தி செயற்பட வேண்டி இருப்பதால், இவற்றைக் கவனிப்பதற்காக தமிழீழ மக்களுக்கென ஒரு 'காவல்துறை' அமைக்கப்பட வேண்டிய வரலாற்றுத் தேவை எழுந்தது. அந்த வகையில் உருவாக்கப்பட்டதே 'தமிழீழ காவல்துறை' ஆகும். இனிவரும் காலத்தில், மக்களுக்குள் நீதியை, ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில 'தமிழீழ காவல் துறையே முழுமையாக ஈடுபடும்.

மேலும்,

நாம் ஒரு தனியரசை அமைக்கப் போராடுகின்றோம். அது வது, எமது மக்கள் தம்மைத் தாமே ஆளுகின்றதான முழுமையான ஆட்சி அதிகாரங்களையும் கொண்ட - ஒரு சுதந்திரமான தனியரசை உருவாக்கவே நாம் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

'அரசு' என்பது, அனைத்து ஆட்சி அதிகாரங்களையும் கொண்ட ஒரு இயந்திரம். பாராளுமன்றம், மந்திரிசபை, நீதிமன்றங்கள், ஆயுதப்படைகள், காவல்துறை, நிர்வாக இலாகாக்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றின் கூட்டமைப்பே இந்த அரச இயந்திரம்.

அந்த வகையில், சுதந்திரத் தனி நாடான தமிழீழத் தனியரசை நிர்மாணிக்கும் ஆரம்பப்படிகளில் ஒன்றாகத்தான் இந்தத் 'தமிழீழ காவல் துறை' உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட இக் காவல்துறை, அவரின் நேரடிப் பொறுப்பின் கீழ் நின்று செயற்படும்.

தமிழீழ மக்களின் வாழ்வு முறைக்கு ஏற்ற வகையில் நீதி, நியாயம், சமூகமேம்பாடு என்பவற்றின் ஒருமித்த வடிவமான சட்டங்களை எமது இயக்கம் வரையும், அச்சட்டங்களை காவல்துறையினர். நேர்மையின் வழி நின்று நடைமுறைப்படுத்துவர். 'தமிழீழத் தனியரசு' உருவாக்கப்பட்ட பின், நாட்டிற்கென. நாட்டு அரசினால் உருவாக்கப்படும் சட்டதிட்டங்களை அவர்கள் செயற்படுத்துவர்,

தமிழீழத் தாயகத்தில் சட்டம் ஒழுங்குகளைப் பேணிப்பாதுகாப்பதுடன், தமிழீழ மக்களின் நலனுக்கும், நல்வாழ்விற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தமிழீழ காவல் துறையினர் அயராது உழைப்பார்கள்.

காலம் காலமாக எமது மக்கள் அந்நிய காவல்துறைகளையே சந்தித்து வாழ்ந்தவர்கள். அவற்றினால், சதா துன்பத்தையும், அழிவுகளையும் எதிர்கொண்டவர்கள். அதனால் எமது மக்களின் மனங்களில் ''பொலிஸ்' (Police) என்றவுடன் வெறுப்பும், பயமும், கசப்புணர்வும் ஏற்படும் என்பது உண்மை தான். ஆனால், 'தமிழீழ காவல் துறையினர்' — மக்களின் மனங்களில்இருக்கும் அவ்வகையான எண்ணங்களை தமது செயற்பாடுகள் மூலம் நீக்குவார்கள்.

தமிழீழ காவல் துறையினர் — நல்லொழுக்கம், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சீரிய பண்புடையவர்களாக இருப்பார்கள். பொது மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்கும், சமூக நீதிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் உழைக்கும் மக்கள் தொண்டர்களாகவும் கடமையாற்றுவார்கள். எமது பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் மக்களோடு அன்புடனும், பண்புடனும் பழகுவார்கள். சமூக விரோத குற்றச் செயல்கள் எதனுடனும் சம்பந்தப்படாதவர்களாகவும், தேசப் பற்று மிகுந்தவர்களாகவும் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள்.

தமிழீழ காவல் துறையைப் பொறுத்த வரை — குற்றங்கள் நடந்து முடிந்தபின், குற்றவாளியைத் தேடிப்பிடித்து கூண்டில் நிறுத்துவது அதன் நோக்கமல்ல; குற்றங்கள் நிகழாதவாறு தடுத்து — குற்றச் செயல்களற்றஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதே அதன் இலட்சியமாகும்.

குற்றம் இழைக்கின்ற ஒருவன், உண்மையிலேயே குற்றவாளியாக இருக்கின்ற போதிலும், அவனும் 'எமது தாயகத்தின் குடிமகன்' தான், என்ற கண்ணோட்டத்துடனேயே காவல்துறை அவனைப் பார்க்கும். அவன் சிறையில் தள்ளப்படுவதற்குப் பதிலாக, சீர்திருத்த நிலையத்தில் விடப்படுவான். அங்கு அவன் தேசத்துக்காகப் பணி செய்வான். அங்கிருந்து அவன், தேசப் பற்றுமிக்கவனாக, சமூக நலனில் அக்கறையுள்ளவனாக, சமூகத்தில் நற்பிரஜையாக வாழக்கூடியவனாக வெளிவருவான்.

'சிங்களக் காவல் துறை' யினரால், யாழ். பொது நூலகம் எரித்துச் சாம்பராக்கப்பட்ட நினைவு நாளான 01-06-1991 அன்று தமது பயிற்சிகளை ஆரம்பித்த 'தமிழீழ காவல் துறை' யினர், அன்றிலிருந்து, எமது தாய்த்திரு நாட்டினதும், அதன் குடிமக்களினதும் மேம்பாட்டிற்காகப் பணி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

## குடாநாட்டின் நன்னீர்... (6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### செய்து முடித்த வாய்க்கால்களின் விபரங்கள்.

| இல. | பெயர் | உ. அ. அ. பிரிவு. | நீளம். (அடி) | வெட்டப் பட்ட மண் (கியூப்) |
|---|---|---|---|---|
| 1 | அளகொல்லை வாய்க்கால். | தெல்லிப்பளை. | 670 | 57 |
| 2 | பித்தாவில் வாய்க்கால். | ,, | 1495 | 102 |
| 3 | ஜனாவில் வாய்க்கால். | ,, | 915 | 50 |
| 4 | கேலன்காமன். | உடுவில். | 6300 | 350 |
| 5 | பெரிய தம்பிரான். | தெல்லிப்பளை. | 630 | 122 |
| 6 | கந்தரோடைவற்றாக்கை. அம்மன் கோயில். | உடுவில். | 4500 | 353 |
| 7 | பொன்னாலைக்குளவாய். | சங்கானை. | 3500 | 118 |
| 8 | நளவராயன் வாய்க்கால். | ,, | 6150 | 460 |
| 9 | நெடுங்குள வாய்க்கால். | ,, | 950 | 95 |
| 10 | பெரியகுள வாய்க்கால். | ,, | 1000 | 153 |
| 11 | ஓடைக்குள வாய்க்கால். | ,, | 800 | 153 |
| 12 | மண்டிகை வாய்க்கால். | ,, | 1475 | 99 |
| 13 | பரவைக்குள வாய்க்கால்: | ,, | 4600 | — |
| 14 | கட்டி வாய்க்கால். | நல்லூர். | 1425 | 160 |
| 15 | சிறுசெம்மணி வாய்க்கால். | ,, | 1800 | 172 |
| 16 | கரவெட்டியான்வாய்க்கால். | ,, | 1610 | 105 |
| 17 | நுணாவில் வாய்க்கால். | சாவகச்சேரி. | 2800 | — |
| 18 | விளைவேலி வாய்க்கால். | ,, | 2000 | 200 |
| 19 | பனிக்கட்டி வாய்க்கால். | ,, | 1900 | — |
| 20 | ஓவாரி வாய்க்கால். | ,, | 5280 | — |
| 21 | கச்சான்சல்லாரை வாய். | ,, | 2800 | — |
| 22 | மடத்து வாய்க்கால். (மடத்து வாசல்) | மருதங்கேணி. | 3000 | — — |
| 23 | வட்டுவத்தை வாய்க்கால். | பருத்தித்துறை. | 2650 | 120 |
| 24 | ஓடைவைரவர் வாய்க்கால். | ,, | 700 | 31 |
| 25 | குமுளடி வாய்க்கால். | ,, | 8700 | 93 |
| 26 | வெள்ளுருவை - ஒத்திராய் வாய். | கரவெட்டி. | 2000 | 130 |
| 27 | தம்பியோடை மாலிச்சந்தி. | ,, | 1000 | 64 |
| 28 | குடாக்கரை வாய்க்கால் | சண்டிலிப்பாய். | 3150 | 103 |
| 29 | அந்திரான் வாய்க்கால். | சங்கானை. | 13610 | 643 |
| 30 | ஆவரங்கால் வாய்க்கால். | கோப்பாய். | 1600 | 80 |
| 31 | ஆலங்குழி வாய்க்கால். | ,, | 1350 | 52 |
| 32 | பினாக்கைக்குள வாய்க்கால் (7) | தெல்லிப்பளை. | 2908 | 203 |
| | | | 93277 | 4268 |
| | | | 17.65 மைல் | |

அமைக்கப்பட்டன. இவ்வேலைகளின் மொத்தப் பெறுமதி 76 இலட்சம் ரூபாய்களாகும்.

31 குளங்களையும், 7½ மைல் நீளமான இவ்வாய்க்கால்களையும், 11½ மைல் நீளமான அணைக்கட்டுகளையும், 12 மைல் நீளமான வடிகால்களையும் திருத்தி அமைக்க எடுத்த காலமோ ஆக மூன்றே மாதங்கள் தான் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். 1991 ஓகஸ்ட் தொடக்கம் ஒக்டோபர் வரை அதாவது 90 நாட்களில் இவ்வேலைகள் திட்டமிடப்பட்டு செய்து முடிக்கப்பட்டது ஒரு வியக்கத்தக்க செயல் என்றே பொறியியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

எரிபொருளோ - இயந்திர சாதனங்களோ இல்லாதஇன்றைய நிலையில் தனித்து -மனித உழைப்பையே வைத்துக்கொண்டு குறுகிய காலஇடைவெளியில் இவ்

### செய்து முடித்த வடிகால்கள்.

| | பெயர் | நீளம் | வெட்டப்பட்ட மண்- (கியூப்) | பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை | பயனடையும் காணியின் விஸ்தீரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | வழுக்கியாறு | 10மைல். | 2500 | 3000 | 2000 ஏக்கர் |
| 2 | உசன் வடிகாலமைப்புத் திட்டம். | 02மைல். | 500 | 500 | 300 ,, |
| | | 12மைல் | 3000 | 3500 | 2300 ஏக்கர் |

வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

இத்திட்டத்திற்கு அவசியமான மனிதவலு ஆரம்பத்தில் சிரமதான அடிப்படையிலும் பின்னர் சிங்கள அரசின் கொடுமைகளினால் வேலையிழந்து - பட்டினியால் வாடிய 1300 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உழைப்பாள மக்களின்முற்று முழுதான பங்களிப்பும் - கடுமையான உழைப்பும், சோர்ந்து விடாதஉற்சாகமுமே இத்திட்டத்தின் முழுமையான வெற்றிக்குக் காரணங்களாகும். அதே நேரம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரும், தேச நிர்மாணிகளும், தமிழீழத்தில் கடமை புரியும் தொழில் நுட்பவியலாளர்களும் இத் திட்டத்தில் மனப் பூர்வமாக ஒத்துழைத்தார்கள்.

இவ் வேலைத் திட்டம் மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டதற்கு இத்துறைக்குத் தொடர்புடைய தொழில் நுட்பவியலாளர்களின் வியத்தகு பங்களிப்பும் ஒரு காரணமாகும். எமது மண்ணும், வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும், என்ற வேட்கையுடன் தொடர்புடைய சகல தொழில் நுட்பவியலாளர்களும், பொறியியலாளர்களும் தாமாகவே முன்வந்து எந்தவித சலுகைகளையோ ஊதியங்களையோ எதிர்பார்க்காமல்புனரமைக்கப்படவேண்டியவற்றை இனங்காணுதல், மதிப்பீடுகள் தயாரித்தல், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் ஆகியவற்றுடன் களத்தில் நின்று நேரடி மேற்பார்வையையும் செய்தனர். இதனால் செலவினங்களையும் விரையங்களையும் ஆகக் குறைந்த அளவிற்கு கட்டுப்படுத்தவும், வேலைத் திட்டத்தை திட்டமிட்டபடி நிறைவேற்றவும் முடிந்தது.

இவ் வேலைகளின் படி குளக் கட்டுக்களில் உயரம் அதிகரிக்கப் பட்டதால் கூடிய கனவளவு நீர் தேக்கிவைக்கப்படுகின்றது. இதனால் இதையண்டிய கிணறுகளில் நீர் நன்றாகப் பேணப்படுவதுடன் நீரின் மட்டமும் உயர்ந்திருக்கும். இதனால்இப்பகுதிகளில் உப உணவுப் பயிர்ச் செய்கையாளருக்கும் இது ஒரு வாய்ப்பாகும்.

இங்கு புனரமைக்கப்பட்ட வடிகாலமைப்புக்களில் ஒன்றான வழுக்கியாறை கருத்தில் எடுத்துக் கொண்டால் இந்த ஆறு 10 மைல் நீளமான வயற்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்கிறது இதன் புனரமைப்பின் மூலம், வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலத்தில் இதை அண்டிய வயல்களில் தேங்கும் அதிகப்படியான நீர் சீராக வடிவதற்கு வசதி ஏற்படுகிறது. இதனால் பயிர் அழிவிற்குட்படுவது தவிர்க்கப்படுகிறது.

உவர் நீர் அணைக்கட்டுக்கள் புனரமைக்கப்பட்டதால் கடல் நீர் நன்நிலங்களை உவர் தன்மையாக மாற்றுவது தடை செய்யப்படுகின்றது. இதனால் இந்நிலங்கள் விவசாய நிலங்களாக தொடர்ந்து பேணப்படுவது சாத்தியமாகின்றது.

இவ்வேலைத் திட்டங்களின் உடனடிப் பெறுபேறாக சுமார் 8,500 குடும்பங்கள் பயனடைகின்றன. 5, 844 ஏக்கர் நிலம் வளம் பெறுகின்றது.

ஒரு வியக்கத் தக்க செயலென வர்ணிக்கப்படும் இச் சாதனை தமிழீழ உழைப்பாள மக்களின் தேசிய உணர்விற்கு கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும்.

# இது எங்கள் வாழ்வு

சிறுகதை

திசைமாறி வந்தகாகம் ஒன்று மட்டும் உயரத்தில் தயங்கித் தயங்கி பறந்து கொண்டிருந்தது. விடியலின் நேரம். சூரியக் கதிர்கள் இன்னும் நிலத்தைத் தொடவில்லை.

எறிகணைகள் மட்டும் ஒவ்வொரு முறையும் வெவ்வேறு திசைகளில் இலக்குத் தேடிப் பறந்து கொண்டிருந்தன.

அமுதன் ஒரு அகன்ற பனையில் சாய்ந்தபடியே அரைத் தூக்கத்தில் இருந்தான். அந்தப் பனந்தோப்பில் பரவலாக அவன் தோழர்கள் கூட்டம் கூட்டமாக இருந்தார்கள். எறிகணைகளின் வீச்சு ஓயும் பொழுது இராணுவத்தினர் வருவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்

"அமுதா என்ன சிந்தனையில இருக்கிறாய்" ? கேட்டுக் கொண்டே அருகில் வந்தமர்ந்தான் வில்வன்.

அமுதன் சாதுவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பே அந்தக் கேள்விக்கு பதில் என்பது வில்வனுக்குத் தெரியும்.

அவர்கள் எழுந்து நடந்தனர். பனந்தோப்பின் விழிம்பில் பனங்குற்றிகளால் அமைக்கப்பட்ட காவலரண்கள் வரிசையாக இருந்தன. காவலரண் ஒன்றின் மேல் ஏறி கால்களை அகலப் போட்டபடியே அமர்ந்தான் அமுதன். அவர்களுக்கிடையில் இனம்புரியாத அமைதி குடிபுகுந்திருந்தது.

" உனக்குத் தெரியும் நான் மூதூரைச் சேர்ந்தனான். முன்னம் போடிவெட்டை என்பது என்ர கிராமம்......, இந்த மண்ணின்ர துயரம் என்ர வாழ்க்கையையும் நிறைய பாதிச்சது...... இப்ப என்ர கிராமம் அழிஞ்சு போச்சுது, என்ர குடும்பமும் சிதைஞ்சு போச்சுது" சொல்லிக் கொண்டு வந்த அமுதன் அமைதியாகி விட்டான். முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் பதிந்து போய்க் கிடந்தது.

" எனக்கும் என்ர தங்கச்சியோட, எங்கட ஊரில வீட்டோடு வாழ வேணும் என்று ஆசைதான். ஆனால் அது நடக்க முடியாத நினைவு. இந்த நாடு எப்போது சுதந்திர மகிழ்ச்சியை சந்திக்குதோ அன்று தான் என் போன்ற போராளிகளின் வாழ்விலும் வசந்தம் வீசலாம்" தன் மனவுணர்வுகளை வெளிப்படுத்தி விட்ட திருப்தியோடு அவன் இமே பார்த்தான்.

" அது பிரச்சனை இல்லையடா, உன்ர தங்கச்சி எனக்கும் தங்கச்சி தான். அவளுக்குமட்டுமல்ல, அவள் போன்ற ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த மண்ணில ஒரு வளமான எதிர்காலம் நிச்சயமா பிறக்கும்" வில்வன் ஆறுதலுக்கு சொல்லி முடித்தான்.

நினைவுகளை மாற்றிவிட வேண்டும் என்ற முடிவுடன் தோள்களை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு கைகளை வீசியபடியே திரும்பிப்பார்த்தான் அமுதன். பனந்தோப்புக்கு முன்பாக விரிந்த வெட்டை வெளியில் விடியலின் சூரியக் கதிர்கள் பட்டுத்தெறிக்கத் தொடங்கியது.

கண்ணுக்கு எட்டும் தூரத்தில் கிடந்த பற்றைக் காடுகள் இருளாகவும் — அமைதியாகவும் கிடந்தன.

'இன்று மாலைக்குள், இப்போது எழும் சூரியன் மறைவதற்குள், இந்த வெட்டை வெளியில்...... எங்களில் எத்தனை தோழர்கள் விழப்போகின்றோம்.' இதயத்தில் வலித்தது.

'எங்கட மண், வருபவன் ஆக்கிரமிப்பாளன்' அவனுக்குள் ஓர் புத்துணர்வு. இடக்கையிலிருந்த அவனது துப்பாக்கி வலக்கைக்கு உறுதியாக மாறிக்கொண்டது.

'இந்த மண்ணின் மலர்ச்சிக்கு இழப்புகள் தேவையானதுதான்' அவனின் நினைவுகளை தொடர்ந்து பனந்தோப்பின் ஒரு முனையிலிருந்து இலகு இயந்திரத் துப்பாக்கி ஒன்று இயங்கத் தொடங்கியது.

★ ★

வைத்தியசாலைக் கட்டிலில் அமுதன் படுத்திருந்தான். காயம் சற்றுப் பலமாகவே இருந்தது. இரண்டு நாட்களின் பின் ஒரு மாலை நேரம் அமுதனின் நெற்றியில் அன்பானதொரு கரம் தவழ்ந்தது.

'யார்'? அவன் கண்விழிக்க முயன்றான். இயலவில்லை. அவனால் இயன்ற மட்டும் பலத்தைத் திரட்டி விழித்தான்.

" அம்மாவா ? "

' இல்லை, அது...... அம்மா... இல்லை...... அம்மா வரமாட்டாள். அவளால் வர முடியாது

★ ★

மூதூரில் இருந்து சிறிது தூரத்தில் முன்னம் போடி வெட்டை என்ற கிராமம் உள்ளது. எங்கு பார்த்தாலும் பரந்த வயல்வெளிகள். நலல செழிப்பான கிராமம். அந்தக் கிராமத்தில் கந்தருக்கு ஓரளவு நல்ல பெயர் இருந்தது. நேர்மையான மனிதர்.

கந்தருக்கு மூன்றும் 'பெடியள்' தான். அமுதன் பிறந்த அடுத்த வருடமே கந்தர் ஐந்து ஏக்கர் வயல்க் காணியை வாங்கினார். அவன் பிறந்த காலம் தான் தனக்கு நல்ல காலம் பிறந்திருக்கு என்பது அவரின் கருத்து. ஆனாலும் அம்பிகைக்கு கவலை தான். தனக்கு பெண் குழந்தைகள் ஒன்றும் இல்லை என்ற கவலை அவளுக்கு இருந்தது. கடைசியாக அம்பிகையின் ஆசையை நிறைவேற்ற, நிலா பிறந்தாள்.

அமுதனுக்கு அம்மாவிலும் தங்கச்சியிலும் சரியான விருப்பம். அம்மா சமைப்பாள். அவன் தங்கச்சியோடு விளையாடிக்கொண்டிருப்பான். அண்ணன்மாருடன் வயல்ப் பக்கம் போவான். கந்தர் மகனைச் சேற்றுக்குள் இறங்கவிடமாட்டார். சில நேரங்களில் மட்டும்- வேலைகளெல்லாம் முடிந்தபின் ஆற்றிற்கு குளிக்கப்போவார்கள். அமுதன் அந்த ஆற்றங்கரை முழுவதும் ஓடுவான் - அலைவான். அண்ணன்மாரின் முதுகில் தொங்கியபடியே ஆற்றில் குளிப்பான்.

அந்த ஆறுதான் எவ்வளவு அழகானது. அமைதியாக ஓடுதோ - நிற்குதோ என்று தெரியாமல் மெதுவாக தளம்பி நிற்கும். இந்த ஆறு சில நேரங்களில் மட்டும் வெறிகொண்டு பாயும். அந்த நேரங்களில் எந்த மனிதருமே ஆற்றில் இறங்க மாட்டார்கள். அன்றிரவு முழுவதும் மழை விடாது பெய்து கொண்டிருந்தது. கந்தருக்கு கவலையாக இருந்தது. இப்படி மழை பெய்தால் பயிர்களை தண்ணி மூடிவிடும். இரவு முழுவதும் அவருக்கு தூக்கம் வரவில்லை. விடிந்தது. சற்றுத் தள்ளி வெடிச் சத்தங்கள் கேட்டன.

கந்தர் கலவரத்துடன் எழும்பி வெளியே பார்த்தார். கிராமத்தவர்கள் பெருவாரியாக ஓடி வந்தார்கள்.

" ஆமிக்காரர் வாறாங்கள் " அவர்கள் தொடர்ந்தும் ஓடினார்கள்.

அம்மா தங்கச்சியை தூக்கினாள். அப்பா அமுதனைத் தூக்கினார். அவர்களும் ஓடினார்கள்.

'எங்கட கிராமம், எங்கட வீடு, நாங்கள் ஏன் ஓடுறம்' அமுதனுக்கு விளங்கவில்லை.

அவர்கள் ஆற்றங்கரை ஓரமாக போய்நின்றார்கள் எனி ஓடேலாது. ஓடுவதென்றால் ஆற்றைக் கடக்க வேண்டும் இந்த நேரத்தில் ஆற்றில் இறங்குவது ஆபத்தானது என்பது எல்லோருக்குமே தெரியும். ஏனெனில் நேற்றுப் பெய்த மழையின் வெள்ளத்தால் ஆறு பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

வெடிச் சத்தங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

" வாறாங்கள் — வாறாங்கள்- ஓடுங்கோ "

தொடர்ந்தும் நிற்க இயலாது, அவர்கள் ஆற்றுக்குள் இறங்கினார்கள். அம்மாவிடம் இருந்து தங்கச்சியை அண்ணன் வாங்கிக் கொண்டான்.

அவர்கள் நடந்தார்கள். தண்ணீரின் அளவு சிறிதுசிறிதாக உயர்ந்தது.

இடுப்பளவு தண்ணி பாய்ந்தது. சிறிது தூரத்தில் நெஞ்சளவிற்கு உயர்ந்தது. ஆற்றின் இழுவை அதிகமாக இருந்தது.

அந்த நேரம் தான், அம்மாவின் கால்களை இரக்கமில்லாத கல் ஒன்று இடறியது.

ஐயோ ! அம்மா......

அவர்களின் கண்களிற்கு முன்பாகவே அம்மாவை இழுத்துக் கொண்டு ஆறுபாய்ந்தது. அவள் போராடினாள் - தத்தளித்தாள். கைகளை உயர்த்தி - உயர்த்திக் காட்டினாள்.

அம்மாவின் அந்த அவலம் நிறைந்த கையசைப்பைத்தான் அமுதன் இறுதியாகப் பார்த்தான்.

அந்த ஆற்றுக்குள் அம்மா எங்கேயோ காணாமல்போனாள். அவளுக்குப் பின்னாலேயே வேறொரு பெண்ணும் அவள் தூக்கிவந்த அவளின் குழந்தையும் ஆற்றில் இழுத்துச் செல்லப் பட்டார்கள்.

கந்தர் இரண்டு நாட்களாக அந்த ஆற்றின் கரை எங்கும் மனைவியின் உடலை தேடி விட்டு சோர்ந்துபோய் வந்தார். பிள்ளைகள் அம்மாவைக் காணாமல் தவித்தார்கள். கந்தராலும் மனைவியின் இழப்பை தாங்கமுடியவில்லை.

அதன் பின்பு பிள்ளைகளுக்கு அம்மாவும் அப்பாவும் கந்தர் தான். அந்தச் சம்பவத்தின் பின்பு கந்தர் பெரிதும் மாறி விட்டார். இரவுகளில் நாய்கள் குலைத்து கிராமத்தை விழிக்கச் செய்யும் - அதன் பின்பு நன்றாக பழகியவர்களைக் கண்டு விட்ட குதூகலிப்போடு முக்கி முனகுங்கள்.

அப்பா எழும்பி வீட்டின் 'செத்தைக்கால்' வெளியே பார்ப்பார். அமுதனும் பார்ப்பான். சிலர் நிற்பார்கள் - கைகளின் ஆயுதங்கள் தெரியும்,

" அண்ணை " அவர்கள்தான் இனிய தமிழில் அழைப்பார்கள். அப்பா கதவைத்திறந்து கொண்டு அவர்களிடம் ஓடுவார். அமுதனும் ஓடுவான். விடிவதற்கு முன் வந்தவர்கள் மறைந்து விடுவார்கள்.

அமுதன் வளர்ந்து கொண்டிருந்தான். இப்போதெல்லாம் கந்தர் புது வேகம் வந்தவர்போல் நடந்தார். பகலில் வீட்டிற்குள்

(9ஆம் பக்கம் பார்க்க)



**ஆறு ஆழமில்லாமல் இருந்தது—**
**கோபமில்லாமல் அமைதியாக ஓடியது.**
**" சீ...... இந்த ஆறு அண்டைக்கும் இப்பிடியே ஓடியிருந்தால்.. ...**
**அந்த நினைவு நெஞ்சை பாரமாக அழுத்தியது.**

# 92 நாட்களில் 256 படையினர் பலி

# 155 ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம்

## 86 புலிவீரர்கள் வீரச்சாவை சந்தித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களில் (ஓக். நவ. டிச.) சிறிலங்கா ஆயுதப்படையினர் பாரிய இழப்புக்களையும், சேதங்களையும் சந்தித்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் தமிழீழம் எங்கும் பரவலாக நாம் தொடுத்த தாக்குதல்களில் 256 சிங்களப் படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 155 ஆயுதங்கள் உட்பட பல்லாயிரம் ரவைகளும், கணிசமானளவு வெடிப் பொருட்களையும், இராணுவ உபகரணங்களையும் நாம் கைப்பற்றியுள்ளோம்.

மணலாறு, வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சிங்களப் படையணிகள் மீது வெற்றிகரமானமுறையில் பாரிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

அதே சமயம் இந்த மூன்று மாத காலத்தில் - (92 நாட்கள்) பல்வேறுபோர்முனைகளிலும் நாம் 86 புலிவீரர்களை இழந்திருக்கின்றோம்.

மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத்தைப் பொறுத்தளவில் கடந்த மூன்று மாதமும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாக அமைந்துவிட்டது எனலாம்.

அங்கே, தொடரானதும், பரவலானதுமான எமது இராணுவ செயற்பாடுகளினால் சிங்களப் படையினர் அங்கே இதுவரை நாளும் நடைமுறைப்படுத்தி வந்த இராணுவக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டு வரும்படி நிர்ப்பந்தித்து விட்டது.

எண்ணிக்கையில் குறைந்த படைவீரர்களுடன் நடாத்தப்படும் ரோந்துகளை நாம் தாக்கி அழித்து, ஆயுதங்களையும் கைப்பற்றி வந்தோம்.

கடந்த மூன்று மாதத்திலும் மட்டக்களப்பு அம்பாறை பிராந்தியத்தில் மட்டும் 65ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 54 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருந்தது இது ஒரு குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

இந்த நிலையில் 25-50 என்ற எண்ணிக்கையுடைய படை வீரர்களின் ரோந்துகளை நிறுத்திவிட்டு பல நூறு படையினரைக்கொண்ட ரோந்துகளையே நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள இராணுவத்துக்கு எழுந்துள்ளது.

இதனால் இராணுவ ரோந்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது இது மட்டக்களப்பு பகுதியில் எமது இராணுவ அரசியல் செயற்பாடுகளுக்கு கூடிய அனுகூலங்களை ஏற்படுத்தியுள்ளது.

## இது எங்கள் வாழ்வு..

பொருட்கள் நிரம்பும் - இரவில் வரும் 'அவர்கள்' அதனை கொண்டுபோய் விடுவார்கள்.

நாட்கள் சென்றன. இராணுவம் வருவது நின்று போனது. இப்போதெல்லாம் பகலிலும் அந்த இளைஞர்கள் வந்தனர் - நின்றனர்.

காலங்கள் மாறின, மொழி மாற்றத்தோடு பசசைப் பேய்கள் வந்து குவிந்தனர். அவர்களுடன் இந்த மண்ணில் பிறந்த சிலதுகளும்...... திரும்பவும் அதே பழைய வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. - இராமத்தவர்கள் ஓடத்தொடங்கினார்கள்.

ஒரு நிலவில்லாத இரவு - கந்தரின் காணி முழுவதும் அந்த அன்னியப் பேயகள் வந்து நின்றனர். அவர்களுடன் வேறு சிலரும்......, கந்தர் வீட்டின் வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

"டே, எல். ரீ. ரீ, தானே?" அரைகுறைத் தமிழில் உயர்ந்து வளர்ந்து தலைப்பாவுடன் நின்ற ஒருவன் உறுமினான்.

"அடே, புலிகள் இங்க வாறவங்கள் தானே - நீயும் புலி தானே" நல்ல தமிழில் ஒருவன் கேட்டான்.

கந்தருக்குத் தெரிந்ததுதான் - இந்த மண்ணிலதான் இந்த நாட்டுக்காக உயிரைக் கொடுப்பவனும் இந்த நாட்டை விற்றுப் பிழைப்பவனும் தோன்றி மறைகின்றான்.

கந்தர், பதில் சொல்லவில்லை. அந்தத்தேச விரோதியின் முகத்தில் விழிக்கக்கூட அவர் விரும்பவில்லை. அந்தப் பேய்கள் அவரை இழுத்துச் சென்றார்கள்.

விடிந்தது - புற்களில் பட்டிருந்த பனித்துளிகள் காயும் முன்பே ஒருவன் ஓடி வந்தான். அந்த ஆற்றில் அப்பாவின் உடல் எங்கேயோ மிதப்பதாக வந்தவன் சொன்னான்.

அமுதனும் அவன் அண்ணன் மாருமம ஓடினார்கள், அப்பாவை காணவில்லை. ஆற்றின் கரை எங்கும் ஓடினார்கள் - தேடினார்கள். ஆட்களற்ற காட்டுக் குறைகளில்...... ஆற்றின் கரைகளில் இருந்து இதயம் வெந்து அழுதார்கள். அம்மாவைப் போன்றுதான் அப்பாவையும் அவர்கள் அதன் பின்பு காணவே இல்லை.

நாட்கள் சென்றன.. மூத்தண்ணன் திருமணம் செய்து கொண்டான். இப்போதெல்லாம் - சின்னண்ணன்தான் அப்பாவிற்கும் அம்மாவிற்குமாக வீட்டில் நின்றான். எப்போதாவது சில நேரங்களில் இந்தத் தேசத்தை நேசிக்கும் அதன் விடுதலைக்காக போராடும் இளைஞர்கள் வருவார்கள்.

சின்னண்ணன் அவர்களிடம் ஓடிப்போவான். அப்பாவை மாதிரி அவனும் ஓடி ஓடி வேலைகளைச் செய்வான்,

இந்தத் தேசத்துக்கு வரும் வெளிச்சத்தை மறைத்து நின்ற அன்னிய இருள் மேகங்கள் விலகப் போவதாக செய்தி பரவியது. மக்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். மனதிற்குள் - முகத்திற்குத் தெரியாமல் சிரித்துக் கொண்டார்கள்.

அந்த நாட்களில் தான், ஒரு காலை நேரம் நகருக்குள் சென்ற சின்னண்ணன் திரும்பி வரவில்லை. இந்தத் தேசத்தின் விரோதிகள், இந்த நாட்டின் பற்றாளன் ஒருவனை இந்த நாட்டை நேசித்ததற்காகவே பிடித்துச் சென்றனர்.

இரண்டு நாட்களின் பின்பு......, அவன் ஆற்றில் மிதந்தான்.

ஆற்றங்கரை எங்கும் ஊரவர்கள் நின்றார்கள். அமுதனும் நின்றான். கரையில் நின்ற காட்டு மரம் ஒன்றின் வேரில் சிக்குப்பட்டு சின்னண்ணனின் உடல் கிடந்தது ஊரவர்கள் வெளியில் எடுத்தனர்.

உடல் எல்லாம் கொடூரமான காயங்களோடு......, அண்ணன்... அந்த மிருகங்கள் அவனை சித்திரவதை செய்து கொன்றிருந்தார்கள்.

★ ★

சின்னவயதிலேயே சந்தித்து விட்ட துயரங்களால் தங்கச்சி கலங்கிப்போனாள். அவள் விழிகளில் நிரந்தரமாகவே சோகமும் - மருட்சியும் படிந்து போனது. வீட்டிற்குள் பகலிலும் - இரவிலும் படுத்திருப்பாள், தூக்கம் வராது. மனம் வெப்பத்தில் தகிக்கும், தவிப்பாள். வெளியே வருவாள். விழிகளால் அமுதனை தேடுவாள். அவளுக்கு ஏதோ தன் கடைசி அண்ணனை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கும்.

அமுதனிலும்தான் எத்தனை மாறுதல்கள். அவனது விளையாட்டுப் புத்தி எங்கேயோ ஓடிப்போனது. தோற்றம் கூட பதினெட்டு வயதிற்கு உரியதல்ல. பார்ப்பவர்கள் அதனை விட அதிகமாகத்தான் நினைப்பார்கள். இப்போதெல்லாம் தங்கச்சிக்கு அபபாவும் அம்மாவும் அண்ணனும் அவன்தான், வயலுக்கு போவான். சேற்றிற்குள் நின்று கடுமையாக உழைப்பான். வேலைமுடிந்ததும் அந்த ஊரவரின் வழமைபோல அவன் ஆற்றங்கரைக்குப் போகமாட்டான்.

சில நேரங்களில் வயல் வரம்புகளில் ஏறிநிற்பான், ஆற்றில் தவழ்ந்து - நெற் கதிர்களை தடவி வரும் தென்றலின் தொடுகை அவனிற்குள் வெறுப்பை வளர்க்கும். பன்னிரண்டு வயதில் அவன் அம்மாவை ஆறு இழுத்துக் கொண்டு போனது தொடக்கம் அந்த ஆற்றில் [illegible] தந்த அவனது உறவுகளின் நினைவுகள் நெஞ்சத்தை அழுத்தும். தன் கோபம் முழுவதையும் தீர்த்து விடுமாற் போல் காற்றில் கைகளை வீசுவான். மனதிற்கு ஆறுதல் வராது. வீட்டைப்பார்க்க வேகமாக நடப்பான். தங்கச்சியைக் காணும்வரை - காணும் எல்லாமே அவனுக்கு வெறுப்பாகவே இருக்கும்.

அவனைப் போலத்தான் முன்னம் போடிவெட்டையும் அமைதியை இழந்து - ஆபத்தை எதிர்பார்த்தபடி தினமும் இருந்தது. எல்லோரும் எதிர்பார்த்தபடியே ஒரு விடிகாலை நேரம் கிராமத்தின் நடுவே வெடிச்சத்தங்கள் எழுந்தன.

"ஆமிக்காரரும் — சிங்களக் காடையரும் வாறாங்கள்"

எல்லோரும் ஓடினார்கள்.., கிராமத்திற்குள் இருந்து அவலமான குரல்கள் எழுந்து காற்றில் கலந்தது.

அமுதன் தங்கையையும் இழுத்துக் கொண்டு ஓடினான்,

ஆறு வழி [illegible]றித்தது...... வெடிச் சத்தங்கள் நெருங்கின. அவர்கள் ஆற்றில் இறங்கினர். ஆறு ஆழமில்லாமல் இருந்தது. கோபமில்லாமல் அமைதியாக ஓடியது.

"சீ.., இந்த ஆறு அண்டைக்கும் இப்பிடியே ஓடியிருந்தா அம்மா தப்பி இருப்பாள்" அந்த நினைவு நெஞ்சத்தை பாரமாக அழுத்தியது. ஆற்றின் கரைகளில் நின்ற மரங்களில் குரங்குகள் ஆர்ப்பரித்தன. கிராமத்திலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் இடைஇடையே கேட்டு அடங்கின.

"எத்தனை நாளைக்கு இப்பிடியே ஓடப்போறோம்" தங்கையின் கேள்வியை கேட்டு அமுதன் திகைத்துப் போனான். அந்தப் பிஞ்சு நெஞ்சில் தோன்றிய சிந்தனை அவனில் பெரிதாக வளர்ந்தது.

"நாங்கள் அடிமைகள், எங்களை யாரும் எப்பவும் - எதற்கு வேண்டும் என்றாலும் கொல்லலாம், எங்கள் உயிரற்ற உடல்களை வழமை போல இந்த ஆறு சுமந்து செல்லும்' நினைவுகளால் எழுந்த வெறுப்பு நெஞ்சம் எங்கும் பற்றிப் படர்ந்தது.

ஆறு சலசலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது அமுதன் கிராமத்தை திரும்பிப் பார்த்தான். கிராமம் எங்கும் எழுந்த கரியபுகை வானில் கூடக்க எழுந்தது. அவனது நெஞ்சம் அழுதது. "இந்த கிராமத்தில நாங்கள் பயமற்ற மனிதர்களாக ஒரு நாளைக்கு வாழ வேணும்" அவன் உறுதியாக நிமிர்ந்தான்

★ ★

"அமுதண்ணைக்கு நினைவு வந்திட்டுது" அந்த வைத்தியசாலை எங்கும் அதிரும் வண்ணம் சின்னவன் ஒருவன் கத்தினான்.

அமுதன் கண்விழித்தான். அவனுக்கு முன்னால் அவனையே பார்த்தபடி அந்தச் சின்னவன் நின்றான். பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும்., உருண்டை முகம் - தலைமயிரை ஒட்ட வெட்டி இருந்தான் விழிகளில் துருதுருப்பும் ஆர்வமும் படிந்து போய்க் கிடந்தது.

"இவர்கள் தான் பராமரிப்பாளர்கள்"

அமுதனுக்கு விளங்கியது. அவன் நிமிர முயன்றான் - சின்னவன் ஓடிப்போய் உதவி செய்தான்.

"என்ர தங்கச்சியும் இப்படித்தான் வளர்வாள். இந்த நாட்டை நேசிப்பவளாக, இந்த நாட்டின் விடுதலைக்காக சின்னவயசிலேயே உழைப்பவளாக......" அவனின் இதயத்திலிருந்து வலி நீங்கி சுகமான உணர்வொன்று படர்ந்தது. திறந்திருந்த பலகணிக்கால் காற்று முகத்திலடித்தது - வெறுமையாக இருந்த உடல் எங்கும தொட்டுத் தடவிச் சென்றது.

திரும்பிப் பார்த்தான் - அவனுடன் போர்க்களத்தில் நின்ற பலர் அங்கு கட்டிலில் கிடந்தனர். தெரிந்தவர்கள் தங்கள் சோர்ந்த - வெளிறிப்போன முகத்தை சாதுவாக அசைத்துச் சிரித்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கு முன்பும் ஒரு சிறுவன் உற்சாகமாக உலகத்தை வென்றுவிடும் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாக நின்றான்.

"இந்தச் சண்டையில் நாங்கள் சிலரை இழந்தும் இருப்போம்" இனந்தெரியாத சோகம் ஒன்று நெஞ்சத்தில் தவழ்ந்தது. வெளியே பார்த்தான். சிறுவர்களில் மூவர் எதையோ கத்திக் கதைத்து சண்டைபிடித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு சென்றார்கள்.

"இந்த மண்ணில் சிந்தப்படும் இரத்தம் ஒருநாள் - இந்தமண்ணை விடுவிக்கும்." அமுதனின் முகத்தில் மகிழ்ச்சியும நம்பிகையும் படர்ந்தது.

அந்தச் சிறுவன் இன்னமும் அருகிலேயே நின்றான். அவனது ஆர்வம் நிறைந்த உருண்டை விழிகளால் பார்த்தபடி......,

முற்றும்

— உண்மைச் சம்பவம் —.

# பெண்கள்மீதான வன்முறை: புலிகளின் நிலைப்பாடு.

**இளைஞன் ஒருவன் நடுவீதியில் வைத்து ஒரு இளம் பெண்ணை அடித்த குற்றச்செயல் தொடர்பாக இங்கே எமது நிலைப்பாட்டை மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.**

*21-11-1991* அன்று மக்கள் நடமாட்டம் மிகுந்த காலை வேளை கொக்குவில் பகுதியில் இளம்பெண்ணொருவர் நடுவீதியில் வைத்து இளைஞன் ஒருவனால் தாக்கப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த மறுநாள் அவ் இளைஞன் தமிழீழக் காவல் துறையால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாக்கப்பட்ட இளம் பெண்ணின் செவிப்பறையிலிருந்து இரத்தம் கசிந்துள்ளதாகவும், முகம் வீங்கியிருந்ததாகவும் மருத்துவ அறிக்கை கூறுகின்றது.

மிதிவண்டியொன்றில் சென்று கொண்டிருந்த இந்த இளம் பெண்ணை, தனது மிதிவண்டியைக்கொண்டு வழிமறித்த அந்த இளைஞன் கடும் சொற்களைப் பயன்படுத்தியபடி அப்பெண்ணின் முகத்தைக் குறியாகக் கொண்டு பலதடவைகள் தாக்கியுள்ளார்.

அதன்பின்னர் ஒரு " வெற்றி வீரனைப்போல " " களத்திலிருந்து " நேராக அப்பெண்ணின் வீட்டிற்கே சென்று துணிவுடன் பெண்ணின் தந்தையை வெளிவாசலுக்கு அழைத்து " உனது மகளை நான் தண்டித்துள்ளேன் " என்று கூறிவிட்டுச்சென்றுள்ளார்.

முதியவரான அந்த அப்பாவித் தந்தை தமிழீழக் காவல்துறையினரின் யாழ். பணிமனைக்குச்சென்று முறையிட்டதைத் தவிர வேறெதுவும் அவரால் செய்யமுடியவில்லை.

திமிர்த்தனம் கொண்ட இவ்வன்முறையை மிகமோசமானதொரு குற்றச்செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இக் குற்றச் செயலில் ஈடுபட்ட இளைஞன் 27 வயது நிரம்பிய பல்கலைக்கழக வைத்தியபீட மாணவனாகும். இளம் பெண் 18 வயது நிரம்பிய மாணவியாகும்.

இருவருடைய வாக்குமூலத்தின் படியும் அவர்களுக்கிடையில் எந்த வித உறவுமுறையுமில்லை, தொடர்புகளுமில்லை.

அந்த இளைஞன் சொல்கின்றான் " ஒரு தனியார் கல்வி நிறுவனமொன்றில் வைத்து கடந்த இரண்டு மாதகாலமாக அந்த மாணவியைத் தெரியும், ஆனால் கதைத்துப்பழகவில்லை."

அந்த மாணவி சொல்கின்றாள் " எனக்கு ஒருசில நாட்களாகத்தான் அந்த இளைஞனைத் தெரியும். அதுவும் என்னை அடிக்கடி பின் தொடர்வதால்தான் அது கூடத் தெரியும். மற்றபடி ஒரு தடவை கூட அந்த இளைஞனுடன் கதைத்தது கிடையாது."

## என்ன காரணம்

அப்படியாயின் இவ்வன்முறையில் இவ்இளைஞன் ஈடுபட என்ன காரணம் ?

அப்பெண்ணை அவமானப்படுத்தி, பழிவாங்கி ஆத்திரத்தைத் தீர்ப்பது தான் அவனது நோக்கம்.

ஆண் என்ற பலம், பொருளாதாரத்திமிர், பண்படாத சிந்தனை, பெண்கள் தொடர்பான இழிவான பார்வை, சமூக அந்தஸ்தில் உயர்ந்தவன் என்ற கர்வமும் ஒன்று சேர்ந்து உச்சநிலையடைய தனது வலைக்குள் அகப்படமறுத்த அந்த இளம்பெண்ணை அவமானப் படுத்தி பழிவாங்கத் தீர்மானித்து நடுவழியில் தனது பேடித்தனத்தைக் காட்டினான.

குறித்த அந்த இளைஞன் அவ் இளம் பெண்ணை தன்வசம் ஈர்க்க முயன்றிருக்கின்றான். அதற்கான அறிகுறிகளை அநாகரிகமான முறைகளில் வெளிப்படுத்தியிருக்கின்றான். அதை அவ் இளம்பெண் தனது சொந்த விருப்பு, வெறுப்பு, சுயகௌரவங்களுக்கு அமைய நிராகரித்திருக்கின்றாள். இப்படிச் செய்ய அவ் இளம் பெண்ணுக்கு உரிமையும் இருக்கின்றது. சுதந்திரமும் இருக்கின்றது.

## வன்முறை மனோபாவம்

ஆனால் அவ்விளைஞனால் இதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை, ஜீரணிக்கவும் முடியவில்லை. அவனிடம் மிக மிகப் பிற்போக்கான சிந்தனைகள் இருந்திருக்கின்றன. பெண்கள் தொடர்பாக மிக இழிவான பார்வை அவனிடம் இருந்திருக்கின்றது.

" கல்வியில் மேல்நிலையும், பணபலமும் ஒருங்கு சேர்ந்த சமூக அந்தஸ்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு இளைஞனாகிய எனது சுட்டுவிரல் அசைவிற்காக இளம்பெண்கள் ஏங்கிநிற்க வேண்டிய இந்த சமூகத்தில் யார் இவள் ? என்னை அலட்சியம் செய்வது !! என்று குமுறியிருக்கின்றான்.

என்னைப் போன்ற ஒரு ஆணின் விருப்பத்தை நிராகரிக்கும் உரிமை எந்த ஒரு பெண்ணிற்கும் இல்லை எனத் திடமாக நம்பினான்.

எனவே இது எனது கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும், ஆண்மைக்கும் விடப்பட்ட சவால் என ஆத்திரப்பட்டிருக்கின்றான்.

எனவே அப்பெண் தண்டிக்கப் பட்டேயாகவேண்டும் என்று முடிவெடுக்கின்றான்.

அத் " தண்டனை " மூலம் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளவும், அவ் இளம் பெண்ணை அவமானப்படுத்தவும், பழிவாங்கவும் முடிவுசெய்தான்.

அதன்பொருட்டு சட்டத்தையும் - ஒழுங்கையும் தனது கையில் எடுத்துக் கொண்டு, மிதிவண்டியிலேறிச் சென்று, அவ் இளம் பெண்ணை நடுவழியில் மறித்து, பலர் முன்னிலையில் தாக்கியிருக்கின்றான்.

## ஒடுக்குமுறை பேணமுயற்சி

இது ஒன்றும் புதியதுமில்லை, இதுதான் காலங்காலமாக நடந்து வருகின்றது என சிலர் நியாயம் கூறலாம்.

அதுவும் உண்மைதான். இப்படித்தான் எமது பெண்ணினம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆண்ஆதிக்க அடிமைத்தளைகளால் கட்டப்பட்டு கூனிக்குறுகி வாழ்ந்து வருகின்றது. அதுதான் சமூக வழக்கமாகவும் பேணப்படுகின்றது. சமூக நீதியாகவும் போற்றப்படுகின்றது. அதையே இன்றைய எமது சந்ததியும் தொடர விரும்புகின்றது.

இவற்றை எதிர்க்க விரும்பிய அல்லது இந்த இழிநிலையிலிருந்து ஒரு மாறுதலைக்காண விரும்பிய பெண்களை - இதே சம்பவத்தைப் போன்றுதான் - அவமானப்படுத்தி, தாசித்து, வேண்டுமானால் உடல் பலத்தையும் பயன்படுத்திக்கட்டுப் படுத்தி அவர்களை எமது ஆணினம் அடக்கியே வைத்திருக்க விரும்புகின்றது.

ஆனால் இன்று இந்த மண்ணில் ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தேசிய எல்லைகளை விடுவித்து அங்கே ஆண் - பெண் சமத்துவத்தைப் பேணும், மனிதனை மனிதன் மதிக்கும் ஒரு புதிய - புரட்சிகர சமூகத்தைப் படைக்க புலிகளாகிய நாங்கள்முயன்றுவருகின்றோம்.

பெண்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவும் ஆண்களின் தேவைகளையும், விருப்பங்களையும் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றுவதற்கென்றே படைக்கப்பட்ட உயிரினமாகப்பார்க்கும் சமூகத்தின் குரூர மனோபாவத்தை உடைத்தெறிந்து இந்தச் சமூகத்தில், ஆண்களைப்போன்று பெண்களும் சம பாத்திரத்தை வகித்து ஒரு கௌரவத்தைப்பெற்று, சம நீதியை அனுபவிக்க வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.

இந்த நிலையில் பெண்கள் மீதான வன்முறைப்பிரயோகத்தை நாம் அனுமதிக்கவே முடியாது.

> **புலிகள் படைக்க இருக்கும் புதிய உலகத்தில் பெண்கள் எந்தவித அச்சமுமின்றி கௌரவத்தோடு சுதந்திரமாக இந்த சமூகத்தில் நிம்மதியாக, உலாவர வேண்டுமென்பதே எமது அவாவாகும். இந்த இலட்சியத்தை நாம் அடைவதாக இருந்தால் பெண்ணொடுக்குமுறைக்கெதிராக நாம் போர்க்கொடி உயர்த்தியே ஆகவேண்டும்.**

## இளைஞன் புரிந்த குற்றங்கள்:

குறித்த அவ் இளைஞன் அவ் இளம் பெண்ணைத் தாக்கிய குற்றத்தை மட்டும் புரியவில்லை. இத்துடன் :-

- ★ அப்பெண்ணின் உரிமையையும், சுதந்திரத்தையும் மதிக்காது, மிதிக்க முயன்றிருக்கின்றான்.
- ★ பெண் ஒடுக்குமுறையின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்தும் மிலேச்சத்தனமான வழிமுறையை தொடர்ந்தும் பேண முயன்றிருக்கின்றான்.
- ★ அப்பெண்ணை வேண்டுமென்றே அவமானப்படுத்தியிருக்கின்றான்.
- ★ எதுவித காரணமுமில்லாமல் அவ் இளம் பெண்ணை பழிவாங்க முயன்றிருக்கின்றான்.
- ★ அத்துடன் தாக்கிவிட்டு அந்த இளம் பெண்ணின் வீடுதேடிச்சென்று, பெண்ணின் தந்தையையும் எச்சரித்து சண்டித்தனமும் காட்டியுமுள்ளான்.

## வன்முறையா? பரீட்சையா?

குற்றச் செயல் நடைபெற்ற ஒரு சில நாளில் அவ்விளைஞன் பங்குபெறும் பரீட்சை ஒன்று நடந்தது. அப்பரீட்சையில் தோற்ற மனிதாபிமான அடிப்படையில் அனுமதிக்கும்படி சிலர் காவல்துறைப் பொறுப்பாளருக்கும், இயக்கத்தின் தலைமைப்பீடத்திற்கும் வேண்டுகோள் விடுத்தார்கள்.

குற்றச்செயலின் தன்மையையும் அது நடந்த காலப்பகுதியையும் கருத்தில் கொண்டு அவ்வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

அப்பரீட்சையானது அவ் இளைஞனின் எதிர்காலம் சம்பந்தப்பட்டது என்ற கோணத்திலிருந்தே அவ்வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஒரு பெண்ணின் உரிமையிலும், சுதந்திரத்திலும், ஆதிக்க மனப்பான்மையுடன் குறுக்கிட்டு திட்டமிட்டு அப்பெண்ணுக்கு அவமானத்தையும், உடல் காயத்தையும் ஏற்படுத்தத் துணிந்த அந்த இளைஞன்மீது அநீதமனிதாபிமானக் கண்கொண்டு பார்ப்பது எந்த வகையில் நியாயமானது ?

ஒவ்வொரு ஆண்டும் நடக்கவிருக்கும் பரீட்சையில் ஒரு முறை பங்குபற்ற முடியாததையிட்டு அவ் இளைஞனுக்காகப் பரிந்து பேசும் இவர்கள் அநீதி இழைக்கப்பட்ட அப்பெண்ணைப்பற்றி, அவமரியாதை செய்யப்பட்ட அவளது மனநிலையைப் பற்றி ஏன் கருத்தில் எடுக்கவில்லை ?

தத்தம் மகளாக அல்லது சகோதரியாக அவமானப்படுத்தப்பட்ட அப்பெண் இருப்பாளாக இருந்தால் குறித்த அவ்விளைஞன்மீது அனுதாபப் பார்வை பார்ப்பார்களா ? அவ்இளைஞனின் எதிர்காலத்தைப் பற்றித்தான் சிந்திப்பார்களா?

மேற்குறித்த வேண்டுகோள்கள் எதைக்காட்டுகின்றது என்றால் " அந்த இளம்பெண் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதைவிட இளைஞனின் பரீட்சை மேலானது என்ற வாதத்தையேகாட்டுகின்றது.

மேலும்,

அந்த இளைஞனின் தந்தையார் உட்பட வேறும் சிலர் அவ்விளம் பெண்ணின் நடத்தை மீது வீண் பழிசுமத்த முயல்கின்றார்கள். இதன் மூலம் அந்த ஆணின் குற்றச் செயலை நியாயப்படுத்த எத்தனிக்கின்றார்கள்.

ஒரு இளம் பெண்ணின் பின்னால் அலைந்து திரிந்துவிட்டு தனது எதிர்பார்ப்புகள்நிறைவேறாததைக் கண்டு ஆத்திரத்தின் எல்லையைக் கடந்த அந்த இளைஞனது நடத்தைபற்றி அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்?

இந்த பாரபட்சமான, அடிமைத்தனம் நிறைந்த எண்ணத்தை, சிந்தனை முறையை இனியும் நாங்கள் மூடிமறைக்கமுடியாது.

## பெண்விடுதலையும் புலிகளும்

இறுதியாக, நாம் சொல்ல விரும்புவது இதுதான்,

இந்தச் சம்பவத்தை ஒரு சாதாரணவாழ்வின் ஒரு சாதாரண நிகழ்வாக நாம் பார்க்கவில்லை.

எமது சமுதாயத்தில், காலங்காலமாக வேரூன்றி வளர்ந்து நிற்கும் ஆணாதிக்க வன்முறையின் ஒரு அவலட்சணமான வெளிப்பாடாகவே இந்தச் சம்பவத்தை நாம் பார்க்கின்றோம்.

பெண்ணினத்தின் உரிமைக்காக, கௌரவத்திற்காக, சமத்துவத்திற்காகப் போராடிவரும் ஒருவிடுதலை இயக்கம் என்ற வகையில் இத்தகைய சம்பவங்களை நாம் அனுமதிக்க முடியாது.

நாம் படைக்க இருக்கும் புதிய உலகத்தில் பெண்கள் எந்தவித அச்சமுமின்றி, கௌரவத்தோடு, சுதந்திரமாக இந்தச் சமூகத்தில் நிம்மதியாக உலாவர வேண்டுமென்பதே எமது அவாவாகும்.

இந்த இலட்சியத்தை நாம் அடைவதாக இருந்தால் பெண்ணொடுக்கு முறைக்கெதிராக போர்க்கொடி உயர்த்தியே ஆகவேண்டும்.

இதில் எந்த அழுத்தங்களுக்கும், முணுமுணுப்புக்களுக்கும் நாம் விட்டுக்கொடுக்கமாட்டோம்.